412

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JAN 1927

Reg. No. M 2147.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

... 9.	அக்ஷயவருஷ மார்கழிம் தைமீ	No 9-10
புத்தகம் 9.	1926-டிசம்பர் 1927-ஜனவரி	பிரதி. 9-10

Contents	Page	பொருளடக்கம்	பக்கம்
Tanjore Mirasdars' Conference	257	தஞ்சாவூர் ஜில்லா 3-வது வருஷாந்திர மகாநாடு	257
Cattle Rearing	284	கால் நடைகளை விர்த்தியாக்கி வளர்க்கும் வழிகள்	284
News and Notes	290, 297, 301	குறிப்புகள்	290, 297, 301
Guinea Grass	291	கினியா புல்	291
Prevention of Insect pests by Co-operation	298	பூச்சிகளினால் உண்டாகும் பெருவாரி நோயைக் கூட்டுறவால் தடுத்தல்	298
Correspondence	302	கடிதம்	302
Review of Journals	304	பத்திரிகா விமர்சனம்	304

Editor : Rao Bahadur J. Chelvaranga Raju

"Jagannadha Baugh" Saidapet,

Annual Subscription including Postage Re. one only.

COPY RIGHT] [REGISTE...

"STARBRAND"

ஸ்டார் பிராண்ட்

SULPHATE OF AMMONIA.

ஸல்பேட் ஆப் அம்மோனியா.

ராமசந்திர ரெட்டியார்:—உடையாரவாள், உங்களுடைய வண்டியில் போகும் மூட்டைகள் என்ன?

குழந்தைவேலு உடையார்:—நல்ல கேள்வி கேட்டீர்; நக்ஷத்திரமார்க்கு ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட் என்னும் எருக்களைப்பற்றி கேட்டதுகூட இல்லைபோலும்?

ராம ரெட்:—ஊரிலெல்லாம் உபயோகிக்கும் புதிய உரங்கள் இவைகள்தானே? ஸரிதான்; இந்தப் பக்கத்தில் ஏராளமாய் நெல் வயலுக்கு இவை இரண்டையும் உபயோகிக்கிறார்களாமே; அப்படியாயின் கரும்பிற்கும் இதைப் போடலாமோ?

கு உ:—தடையென்ன; நானே இவைகளை என் நெல்லுக்கும், கரும்பிற்கும் உபயோகித்து நல்ல லாபத்தையடைந்திருக்கிறேன். மற்றும் கோயமுத்தூரிலுள்ள என் தம்பியும், கேழ்வரகு, புகையிலை, மிளகாய் முதலியவைகளுக்கு உபயோகித்து மிகுந்த பலனை அடைந்திருக்கிறதாகத் தெரிவித்திருக்கிறான்: வெங்காயம், கொடிக்கால், காய்கறி தினுசுகள், தென்னை, வாழை முதலிய பழ மரங்களுக்[illegible] வருகிறார்களாம். இது மாத்திரமல்ல. இதில் [illegible] கொள்கைக்கு விரோதமான வஸ்துவின் ஸம்பந்தமே கிடையாது; விலையோ மிகவும் ஸரஸம்.

ராம ரெட்:—அப்படியானால் இவைகளின் விலையென்ன?

கு. உ:—ஸல்பேட் ஆப் அம்மோனியா 80 ராத்தல் கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ 8-8-0 வீதமும், 112 ராத்தல் கொண்ட ஸூபர் பாஸ்பேட் மூட்டை ஒன்றுக்கு ரூ. 5-8-0 வீதமும்; ஸாமல் கோட்டை, தென்னாலி, நெல்லூர், பெஜவாடா, ஹாஸ்பெட், கடப்பை முதலிய இடங்களிலும், தமிழ் நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுராந்தகம், விழுப்புரம், குடியாத்தம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, பொள்ளாச்சி, கோயமுத்தூர், ஈரோடு, முதலிய இடங்களிலும், மைசூர் ராஜ்யத்தில் பெங்களூர் மைசூர், தாட்பலாபூர், சிக்பலாபூர், சிக்மகளூர், ஹாசென், முதலிய இடங்களிலும். இண்டோ அக்ரி லிமிடெட்டால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள டெப்போக்களில் கிடைக்கும்.

இவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே பக்கத்து வயலிலிருந்துவரும் ஆராவமுத அய்யங்கார்.—எங்கள் கிராமத்தோர் அனைவரும் சேர்ந்து மொத்தமாய் வாங்கினதில் விலை இன்னும் ஸரஸமாய்க்கிடைத்ததாம்; நீங்களும் இவ்விதமே சேர்ந்து மொத்தமாய் சென்னை ஷாவாலெஸ் கம்பெனியாரவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பர்ட்டிலைஸர் பிராபகண்டா ஆப் இந்தியா லிமிடெட்.

காரியதரிசிகள்:—ஷாவாலஸ் அண்டு கம்பெனி, மதராஸ்.

Fertiliser Propaganda of India, Limited.,

Secretaries:—SHAW WALLACE & CO.

Madras.

18 JAN 1927

THE "AGRICUTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

Vol. 9.	அக்ஷயஹு மார்கழிமீ தைமீ	No 9-10.
புத்தகம் 9.	1926-டிசம்பர் 1927-ஜனவரி	பிரதி. 9-10.

TANJORE MIRASDAR'S CONFERENCE.

தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரர்களின் 3 வது வருஷாந்தர மஹா நாட்டில் அக்கிராசனம் வகித்த ராவ்பஹதூர் ஜெ. செல்வாங்க ராஜா அவர்களின் சொற்பொழிவு

கனம் பொருந்திய மந்திரியவர்களே! கனவான்களே!

தென் ஜில்லாக்களில் சிறப்புற் றோங்கும் தஞ்சை ஜில்லா மிராசுதாரர்களின் மஹாநாட்டில் என்னை அக்ராசனம் வஹிக்கும்படி கோறியது எனக்கே அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஏனென்றால் தஞ்சை ஜில்லா வாசிகள் கல்வி தேர்ச்சியிலும், புத்திசாதுர்யத்திலும், மற்றவர்களுக்கு மேல்பட்டவர்களென்பது லோகப்பிரசித்தியான விஷயம். ஒரு ஜில்லாவிலுள்ளவர்களின் மேம்பாட்டை அவர்களுடைய கல்வியி லிருந்தறியலாம். இவ் விராஜதானியிலுள்ள ஜில்லாக்களி லெல்லாம் கல்வியில் முதன்மையாய் நிற்பது தஞ்சாவூர் ஜில்லாதான். 1900-1901ல் எடுத்த கணக்கின்படி இந்த ஜில்லாவில் தான் 100க்கு மொத்த ஜனத்தொகையில் 20 பேர்கள் கல்வி கற்றவர்களாயிருக்கிறார்கள். இதர ஜில்லாக்களி லெல்லாம் இதற்குக் குறைந்தே யிருக்கின்றனர். அத்துடன் இந்த ராஜதானியிலுள்ள ஜில்லாக்களில் அதிக ஜனத்தொகையுடைய ஜில்லாவும் இதுதான். அப்படியிருந்தும் 100க்கு 20 பேர் கல்வி கற்றிருப்பது மெச்சத்தகுந்ததே. எந்த ஜில்லா நீர்வளம், நிலவளம், குடிவளம் பெற்றிருக்கிறதோ அதுவே சிறந்த ஜில்லா எனப்படும். இது அதிக ஜனத்தொகை பெற்றிருப்பதால் குடிவளமுள்ள தேசமெனச் சொல்லலாம்.

இந்த ராஜதானியிலுள்ள சாகுபடி நிலங்களில் ஜலம் பாசானமாகும் நிலங்கள் சராசரி 100க்கு 27என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலோ ஜலப்பாசான விஸ்தீரணம்100க்கு 73 பாகம்; அதாவது ஏறக்குறைய $\frac{3}{4}$ பாகம் நிலம். ஆகையால் நிலவளம் பெற்ற தென்பதிலும் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை. மற்ற ஜில்லாக்களில் ஆறுகளிலிருந்து நேராக ஜலம் பாயும் விஸ்தீரணம் அதிக குறைவாயிருக்க, இந்த ஜில்லாவில் 100க்கு83பாகம் ஆற்றுப் பாசானமாகவே யிருக்கிறது. இந்த ஜில்லாவின் மொத்த சாகுபடி விஸ்தீர்ணம் பதிமூன்று லட்சத்து ஐம்பத்தி மூவாயிர ஏக்கரில் சுமார் வருஷா வருஷம் பத்துலட்சத்து பத்தாயிரத்து முந்நூற்று அறுபது ஏக்கர் நிலம் நஞ்செய் சாகுபடியாகிறது. இம்மட்டோ? இஜ்ஜில்லா வாசிகள் சர்க்காருக்கு 1900 – 1901-ம் வருஷத்திய கணக்குப் பிரகாரம் வருஷா வருஷம் ஐம்பத்தேழு லட்சத்து 56-ஆயிரத்து 220ரூபாய் நிலத்தீர்வை செலுத்துகிறார்கள். அதிலும் இந்த ஜில்லா முதன்மையாகவே நிற்கிறது. மேலும் அக்காலத்திய கவிவாணர்கள் இந்த ஜில்லாவை அதி சிலாக்ய மாகவே வர்ணித்திருக்கிறார்கள். ஷேக்ஸ்பீயர் என்னும் ஆங்கிலேய கவிராயர், ஆங்கிலேய பாஷையில் சுலபமாய் எவரும் எளிதில் அறியுமாறு எவ்வாறு கவிபாடினாரோ, அவ்வாறே தென்ஜில்லாவில் தமிழ் பாஷையில் கவிபாடிய காலஞ்சென்ற ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளையவர்கள் நமது இந்தியாவையே ஓர் பசுவாகவும் நமது ராஜதானியையே அதன் மடியாகவும், தென் ஜில்லாக்களை பால்சொரைகளாகவும் வர்ணித்து எழுதியிருக்கிறார்கள். தெய்வப்புலவர் கம்பர் இஜ்ஜில்லாவை வர்ணித் திருப்பதை இங்கு சொல்லாமலிருக்கக் கூடவில்லை.

ஏராலே சேராக்கி
எருவாலே கருவாக்கி
நீராலே பயிர்களை
நிலைப்பில் பார்த்தமை யின்றி
காராலே, காவேரிநதியாலே
காசினியில் ஆராலே
பசிதீர்வர்- அகநிலத்திற்
பிறந்தோரே

என்று பாடியிருக்கிறார்.

இன்னும் இவ்வர்ணனைகளைச் சொல்லிக் கொண்டுபோனால் விரியும் நிற்க இஜ் ஜில்லா வாசிகளில் பலர் திவான்களாயும், ஹைகோர்ட் ஜட்ஜ்களாயும் பிரபல பத்திரிகாசிரியர்களாயும் தேசாபிமானிகளாயும் பொது ஜன ஊழியர்களாயும் இன்னும் இதைப் போன்ற எல்லா உயர்தர ஸ்தானங்களிலும் அமர்ந்து பேரும் பிரக்யாதியும் பெற்று வாழ்வதே அவர்களுடைய பெருமையை நிதர்ஸனப் படுத்துகிறது. இந்த ஜில்லாவிற் கணிகலமாய் விளங்கும் அப்பேர்ப்பட்டவர்களிற் சிலர் இங்கு விஜயம் செய்திருக்கும்போது சென்னையிலிருந்து என்னை அக்ராசனம் வஹிக்க ஏன் அழைத்தார்களென்று தெரியவில்லை. ஒருக்கால் நான் விவசாய டெப்டி டைரெக்டராயிருந்து உபகாரச் சம்பளம் பெற்றிருப்ப தாலும், "கிருஷிகன்" பத்திரிகாசிரியாயிருப்ப தாலும், 30 ஏக்கர் தோட்டம் வைத்து சைதாப் பேட்டையில் பலதினுசு பழச் செடிகளையும், புஷ்பச் செடிகளையும் வளர்த்து வருவதாலும் நூதன பயிர் தினுசுகளை பரீட்சார்த்தமாய் வளர்த்துப் பார்ப்பதாலும், எனக்கு விவசாயத்தில் அதிக நிபுணத்வம் இருக்கக்கூடுமென்றும், உங்களுக்கெல்லாம் தெரியாத பல நூதன விஷயங்களை நான் சொல்லக் கூடுமென்றும் நீங்கள் நினைத்து வரவழைத்திருந்தால் நீங்கள் ஏமாற்றமடைய ஹேது உண்டென்று நான் உங்களை முன் கூட்டியே எச்சரிக்கின்றேன். ஏனென்றால் நான் சாதாரண கிருஷிகனே யொழிய, அயல் தேசம் சென்று அங்குள்ள விவசாயக் கல்வி கற்று சிறந்த பட்டங்களும் பேரும் பிரக்கியாதியும் பெற்றவனல்ல.

ஆகவே என்னைவிட மிக்கப் பிரக்யாதிபாய் இந்த ஸ்தானத்தை வஹிக்கக் கூடியவர்கள் இங்கு பலரிருந்தும் எனக்கு அக்கௌரவம் கொடுத்ததற்காக உங்களெல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன்.

இஜ்ஜில்லாவைப் பற்றி இவ்வளவு தூரம் புகழ்ந்து பேசியதிலிருந்து எனக்கு இஜ்ஜில்லாவின் தற்கால நிலமை தெரியாமலிருக்கக் கூடுமோ வென்னும் சந்தேகம் உங்களில் சிலருக்குப் பிறக்கலாம். நான் விவசாய உத்தியோகஸ்தன் தோரணையில் இஜ்ஜில்லாவின் பழக்கங்களைப் பற்றி விசாரித் தறிந்திருப்பதோடு, இஜ்ஜில்லாவிலுள்ள சில மிராசுதார நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி பன்முறை ஓய்வு காலங்களில் இந்த ஜில்லாவிற்கு வந்து இவ்விடத்திய பழக்கங்களை விசாரித்தறிந்து சில திருத்தங்கள் செய் திருப்பதால் எனக்கு

ஏறக்குறைய இஜ்ஜில்லாவின் பல பாகங்களின் சில வருஷங்களுக்கு முன்னிருந்த நிலமை சற்று தெரியுமென்றே சொல்ல வேண்டும். அப்பாலும் அப்போதைக்கப்போது இஜ்ஜில்லாவைப் பற்றி பிரசுரமாகும் பல விவசாயவிஷயங்களையும் கவனித்து வந்திருக்கிறேன். ஆகையால் எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன்.

"No two doctors agree" அதாவது வைத்தியர்களில் இருவர் ஒருவர் செய்வதை மற்றவர் ஒத்துக் கொள்வதில்லை யென்று ஆங்கிலேய பாஷையில் ஓர் வழக்குச் சொல் உண்டு. வைத்தியர்களே அப்படி யென்றால் விவசாயம் என்ற மஹா சமுத்திரத்தில் அபிப்பிராய பேதங்களிருப்பது ஆச்சரியப் படத்தக்க காரியமல்ல. ஆகையால் நான் சொல்லப் போகும் விஷயங்கள் உங்கள் மனதிற் கிசைந்தவாறு அமையப்பெறா விட்டால், உங்களுக்கு எதெது சாரமுள்ளதாகத் தோற்றுகிறதோ அவைகளை மட்டும் அங்கீகரித்துக்கொண்டு சக்கையென்று தோற்றும் விஷயங்களைத் தள்ளிவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இஜ்ஜில்லாவில் விவசாயத்துக்கு இன்றியமையாத பல இயற்கையான சாதனங்க ளமையப் பெற்றிருந்தும், முற் காலத்தில் இந்த ஜில்லா இருந்த பெருமையையும் தற் காலத்தில் இஜ்ஜில்லாவிலுள்ள பல கிருஷிகர் நாளுக்கு நாள் கடன் காரராகி பரிதாபப் படக் கூடிய நிலமையி லிருப்பதையும் பார்க்கும் போது கிருஷிகரால் அனேகமாய் தடுக்கக்கூடாத காரணங்களால் இக்கெதிக்காளானார்களே தவிர வேறல்ல வென்று நான் நினைக்க வேண்டி யிருக்கிறது. அக்காரணங்களென்ன வென்றும், அதைத் தடுக்கக் கூடிய வழிகளுண்டா வென்றும் தீர்க்காலோசனை செய்து பார்த்துக் கண்டு பிடித்து, கூடுமானால் அவ்வாறு நடந்து ஏழைக் கிருஷிகருடைய பரிதாப கரமான நிலைமையை நிவர்த்திப்பதே இக் கூட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றா யிருக்கக் கூடு மென்று நான் பாவிக்கின்றேன். பலர் கூடி தீர்க்காலோசித்து, நடத்தினால் கஷ்டமான காரியங்களும் கைகூடு மென்றே நம்புகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் கிருஷிகரினும் ஏறக்குறைய $\frac{3}{4}$ பாகம் குடியானவர்கள் கடனுக்குள் பட்டிருக் கிறார்கள். இதற்கு உண்மைக் காரணம் இன்னதென்றறியாத சில தலைவர்களும், கிராம வாழ்க்கையே இவ்வாறிருக்கு மென்றறியாத பலரும், விவசாய நிபுணர்களிற் சிலரும் இப்பேர்ப் பட்ட பிரசங்க மேடைகள் மீதேறி வார்த்

தைப் பந்தல்கள் சிங்காரிக்க ஆரம்பிக்கும் போது கிருஷிகர் பழைய நாள் பழக்கங்களை மாற்ற மனமில்லாதவர்களென்றும், குருட்டு நம்பிக்கை யுடையவர்களென்றும் தங்கள் பரிதாப கரமான நிலைமையை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற உண்மை அபிப்பிராயங்களற்றவர்களென்றும், தன் மதிப்பும், ஊக்கமும் சிக்கனமும் இல்லாதவர்களென்றும், சுப, அசுப காலங்களில் அளவற்ற பொருளைக் கடன் வாங்கித் தாராளமாய்ச் செலவு செய்து அப்பால் வட்டி கொடுக்க வழியில்லாமல் கடைசியாக தங்கள் இல்வாழ்க்கைக்கு ஜீவாதாரமாயிருக்கும் நிலத்தையும் ஆடுமாடுகளையுமிழந்து அனாதைகளாய் விடுகிறார்களென்றும் சர மாரியாய்ப் பொழிந்து தள்ளுகிறார்கள். ஆனால் கிராமங்களுக்குச் சென்று கிருஷிகருடன் பழகி அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்து கொண்டவர்கள் இவைகள் அபூர்வமாய் எங்கோ சிலருக்குப் பொருந்துமேயொழிய பெரும்பான்மையோருக்குப் பொருந்தாதென்பதை நன்குணர்வார்கள். இன்னும் சிலர் நிலங்கள் தாயாதிகளுக்குள் பிரிக்கப்பட்டுப்போவதால் உபயோகமுள்ள விவசாய சீர்திருத்தங்கள் செய்வதற்குச் சாத்யமில்லாமற் போய்விடுகிறதென்றும் இவ்வாறு பிரிவினையாவதால் மேல்நாடுகளில் கையாளப்படும் உளவேற்றனக் கருவிகளும் இயந்திரங்களும், மின்சார சக்தியால் உபயோகப்படக்கூடிய சாதனங்களும் உபயோகிப்பதற்கு மார்க்கமில்லாமற் போவதால் விவசாயம் இலாபகரமாய்ச் செய்வதற்கில்லை யென்றும் சொல்லுகிறார்கள். இந்த ஜில்லாவிலிருக்கும் நிலங்கள் அதிலும் நன்செய் நிலங்களில் பெரும்பான்மையானவைகள் அநேகமாய் மேற்சொன்ன இயந்திர மின்சார சக்திகளால் வேலை செய்வதற்கு இயற்கையாகவே லாயக்கில்லாதவைகளென்பதை அவர்கள் அறியார்கள் போலும். ஏனெனில் மேற்சொன்ன உளவேற்றனக் கருவிகள் இயந்திர சாதனங்கள் முதலியவை தனித்தனி வாங்கி இலாபகரமாய் உபயோகிக்கக் குறைந்தது 4 அல்லது ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் ஒரே சதுரமாயும் மேடு பள்ளங்களில்லாமலும் நடுவரப்புகளில்லாமலும் இருப்பதவசியம். அநேகமாய் அப்பேர்ப்பட்ட சதுரமானதும் சமதளமுள்ளதுமான நன்செய் நிலங்களை இங்கு பார்ப்பது அபூர்வமென்று உங்களெல்லோருக்கும் தெரியும். ஒரு பாகம் ஒரு ஏக்கராயிருப்பதிலும் 10 செண்ட்டாயிருப்பதிலும் கஷ்டநஷ்டங்கள் ஏற்படப்போவதில்லை. ஆகையால் பாசப் பிரிவினையால்

கெட்டுப்போயிற்றென்பது நம்பக்கூடியதல்ல. ஜப்பான் சைனு முதலிய இடங்களில் இதைப்போலவே உள்ள சிறு சிறு பாகங்களிலிருந்து இலாபகரமான விவசாயம் செய்து வருவதாய் சர் பிரடரிக் நிக்கல்சன் துரையவர்கள் ஜப்பான் போய் வந்தவுடன் எழுதிய குறிப்பை வாசித்தவர்களுக்கு நன்கு விளங்கும். பழைய நாள் பழக்கங்களை கிருஷிகர் விட மனமில்லாதவர்களென்று சர்வ சாதாரணமாய்ச் சொல்லுகிறார்களே யொழிய அதற்குக் காரணமென்ன வென்று சிந்திப்பதில்லை. திருஷ்டாந்தமாக இப்போது இந்த ஜில்லாவையே எடுத்துக் கொள்வோம். இங்கு சராசரி ஒரு பட்டாவுக்கு நன்செய் 3·43 ஏக்கரும் புஞ்சை 1·63 ஏக்கரும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இதற்கு முந்திய செட்டில்மென்டில் தீர்மானம் செய்திருக்கும் மாசூலைப் பார்த்தால் ஏக்கருக்கு 25 கலம் அல்லது 600 பட்டணம் படிக்குமேல் போவதில்லை யென்றுதெரிகிறது. அதில் அறுவடைக்கும் போரடிப் புக்கும் 100க்கு 8 பாகம் அதாவது 48 படி நெல் போக மீந்த 552 படி நெல்லில் நூற்றுக்கு 25 பாகம் அதாவது கால் பாகம்138 படி புறக்குடி வாரம் என்றுபயிர் செய்தவனுக்குக் கொடுக்கப் படுகிறது. கருமான், தச்சன், காவல் சுதந்தரம், களப்பிச்சை போன்ற செலவுகள் 100க்கு 5பாகம் அதாவது 27½படி செலவாகிறது. சாகுபடி செலவு நூற்றுக்கு 36 பாகம் அதாவது 198 படி ஆகிறது. ஆகவே மேற்சொன்ன செலவுகளாகிய 138ம்27ம்198ம் ஆக 363 ஐ 552 படியிலிருந்து கழித்து விட்டால் மீதி 188 படி தான் நிற்கிறது. இதிலிருந்து சர்க்கார் தீர்வைக்காக 50படிமுதல் 60 படிவரைகாலவிலைக் கேர்ப்பட செலவாகிறது. குறைந்தது 50படியாக வைத்துக் கொண்டாலும் மீந்தது ஏக்கருக்கு 133 படி தான். இக்கணக்கின்படி 3·43 ஏக்கராவுக்கு வருமானம் 473படி நெல்தான். இத்துடன் 3·43 ஏக்கரில் 8ல் ஒருபாகமாகிய. 0.43 ஏக்கரில் 2ம் போகம் விளைந்தாலும் சர்க்கார் தீர்வை ஒன்று நீங்கலாக ஏக்கருக்கு வந்த 188 படிவீதம் 81 படியும் சேர்த்தால் 554 படி தான். புறக்குடி வாரம் சாகுபடியில் நிலத்தை விட்டால் ஏக்கருக்கு 25 கலம் காண்பதாக வைத்துக் கொண்டால்கூட வரவு 551 படிதான். ஆனால் கணக்குகளிலிருந்து 25 கலம் காணவில்லை யென்று தெரிகிறது. ஆகையால் வருமானம் இன்னும் குறைவாகவே யிருக்குமே தவிர அதிகமாக இருக்காது

இதைத்தவிர நிலங்களை குத்தகைக்குக் கொடுத்து விடுகிற பழக்கம் ஒன்றிருப்பதாகத் தெரிகிறது. முன் சொன்ன புறக்குடி

வார ஏற்பாட்டில் நிலச்சுவான் எருமுதலியன போடுவதால் நிலம் அவ்வளவு கெட்டுப் போவதில்லை. குத்தகைக்கு விடுவதில், குத்தகைதாரன் அகப்பட்டவரையில் சுற்றிக் கொண்டு போவதால் எருவிடுவதேயில்லை. ஆதலால் நிலம் நாளுக்குநாள் க்ஷீணித்துப் போக ஹேதுவிருக்கிறது. ஆனால் அந்த ஏற்பாட்டில் ஏறக்குறைய புறக்குடி வாரமும் சாகுபடி செலவும் சுமார் 100க்கு 60பாகம் போவதற்குப் பதிலாக இதில் நிலச்சுவான் 60 பாகம் பெருகிறான். அறுவடை போரடிப்பு களச்செலவு முதலியவைகளைக் கழித்துப் பார்த்தால் இந்தஏற்பாட்டில் நிலம் நல்லஸ்திதியிலிருப்பதாகவும் ஏக்கருக்கு 25 கலம் கண்டுமுதல் ஆனதாகவும் வைத்துக்கொண்டாலும் ஏக்கருக்கு 253 படியும், 3·43 ஏக்கருக்கு 867 படியும்; 2ம் போகம். 0·43 சென்டுக்கு 130 படியும் சேர்த்து மொத்தம் 997 படிநெல்தான் சுபிக்ஷமானகாலங்களில் கிடைக்கிறது. இந்த ஏற்பாட்டில் நிலங்கள் க்ஷீணிக்கஹேதுவிருப்பதால் இவ்வளவு கிடைக்குமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. அப்படியே கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும் 1 மாதத்திற்கு வருமானம் அதாவது 83 படி நெல் தான். கனவான்களே! இப்போதிருக்கும் விலைவாசிகளில் ஒரு குடும்பமானது ஒரு மாதத்திற்கு இக்குறைந்த வருமானத்தைக் கொண்டு எவ்வாறு ஜீவித்து விவசாய சிர்திருத்தம் செய்யக்கூடுமென்று சற்று தீர்க்காலோசனை செய்து பாருங்கள். ஏதாவது கூலி அகப்பட்டால் அவ்வேலைகளைச் செய்தும், ஒரு எருமையை வைத்து அதிலிருந்து கிடைக்கும் மோரை சொந்தத்திற்கு தாங்கள் சாப்பிடும் சாப்பாட்டுக்கு உபயோகித்துக் கொண்டும், வெண்ணெயை நெய்யாக்கி விற்பதிலிருந்து மேற் செலவு செய்து கொண்டும் $1\frac{1}{2}$ ஏக்கர் புஞ்செயிலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானத்தைக்கொண்டு துணி மணி வாங்கியும் தங்கள் வாழ்நாட்களை அதிக கஷ்டத்துடன் கழித்து வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட துர்ப்பாக்கியமான நிலைமையில் உழவு மாடுகளாவது எருமையாவது எக்காரணத்தாலாவது செத்துப்போனாலும் வீட்டில் ஏதாவது அசுபம் நேர்ந்து விட்டாலும் அப்போது தான் அக்குடும்பத்தில் "கடன்" என்னும் சனீஸ்வரன் வந்து குடிகொள்ள ஆரம்பிக்கிறான்.

ஒரு காலத்திலில்லாவிட்டால் ஒரு காலத்தில் ஒரு குடும்பத்திற்கு இப்பேர்ப்பட்ட அசம்பாவிதமான காரியம் நடந்தேறு மல்லது நடக்காமலிருக்க முடியாது. எப்போது கடன் வந்து விட்டதோ அப்போது

கடன்காரன் மாசூல் சமையத்தில் வந்து கடனைத் தண்டிக் கொண்டு போய் விடுகிறான். அப்பால் அன்றாடக சாப்பாட்டிற்கே கஷ்டமாகிவிடுகிறது. மறுபடியும் யாரிடமாவது அதிக வட்டிக்குப் பணம் வாங்கி அன்றாடக காலட்சேபம் செய்ய வேண்டிவருவதால் நாளுக்கு நாள் கடன் ஏறிக்கொண்டே போகிறது. இவ்வளவு துர்ப்பாக்கிய நிலைமையி லிருக்கும் ஒரு குடியானவனிடம் விவசாயக் காலேஜில் வாசித்து பரீட்சையில் தேறி உண்மையான விவசாய அனுபோகமில்லாத ஓர் விவசாய அஸிஸ்டென்ட் டிமான்ஸ்டிரேட்டரோ, அல்லது சீமையிலிருந்து புதிதாகப் பரீட்சையில் தேறி இந்திய அனுபோகம் எள்ளளவும் இல்லாத ஓர் உயர்தர உத்யோகஸ்தரோ போய் தங்கள் அறியாமையாலோ அல்லது விவசாயச் சீர்திருத்தங்கள் விரைவில் செய்துவிட வேண்டும் என்னும் ஊக்கத்தாலோ அவர்களுக்குத்தோன்றியவாறு சொல்லி அதன்படி ஓர்கிருஷிகன் கையாடி எக்காரணத்தாலோ கிருஷிகன் நஷ்டமடைய நேர்ந்தால் அவன் கெதி என்ன வாகுமென்பதையும், கண்ணுக்குத் தெரிந்த ஆகாரவபிற்று சாப்பாட்டை இழக்க எவர்தான் சம்மதிப்பார் என்பதையும் சற்று யோசியுங்கள். இதற்கு திருஷ்டாந்தரம் ஒன்று சொல்லுகிறேன். விவசாயடிபார்ட் மெண்டாரால் சோதனை செய்து திட்டமாய் இதர ஜில்லாக்களில் இலாபம் கொடுப்பதாய் அனுபவ பூர்வமாய்த் தெரிந்திருக்கும் பசுந்தாள்பயிரை தண்ணீர் இறைத்து மங்கலல்லூர் சர்க்கார் பண்ணையில் மூன்று வயல் களில் 1912-13ம் வருஷங்களில் விதைத்து, மடக்கி உழுது சாகுபடி செய்த பொழுது மற்ற ஜில்லாக்களில் கண்டு முதலானதைப் போல் ஜாஸ்தி மாசூல் கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக (ஏக்கர்ஒன்றுக்கு மாமூலாய் எருப் போடாமல் பயிர் செய்தபோது 442 படியும், 410 படியும் 464 படியும், முறையே கொடுத்துக் கொண்டிருந்ததற்குப் பதிலாக) 79 படியும் 63 படியும் 97 படியும் கொடுத்தது. கனவான்களே இந்தமூன்று வயல்களில் ஒரு சம்சாரி 1316 படி மாசூல் அடைவதற்குப் பதிலாக 229 படி மாசூல் கொண்டு போனால் அவன் கெதி என்னவாகு மென்பதை சற்று யோசித்துப் பாருங்கள். இவ்வாறு நடப்பது அபூர்வமானாலும் அந்த அபூர்வ சம்பவம் தன் விஷயத்தில் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வதென்றே பயப்பட வேண்டியிருக்கிற தென்று சொல்லுகிறார்கள்.

நிலங்களின் க்ஷீணிதம்

ஆகையால் ஓர் கிருஷிகன் தன் கண்ணால் அனுபவத்தில் பார்த்து தனக்கு அனுகூல முண்டாகுமென்று திட்டமாய்க் கண்டறிந்தா லொழிய அச்சீர்திருத்தங்களைக் கையாட முன் வரமாட்டான். சர்க்கார் பண்ணைகளில் செய்து காட்டினாலும் பவுன் பவுனாய்ப் போட்டு ரூபாய் ரூபாயாக எடுக்கிறார்களென்று சந்தேகம் கொண்டு நம்புவதற்கு பின்வாங்குகிறான். சர்க்கார் பண்ணைகள் பரீட்சார்த்தமாய் நடத்தப் படுவதால் அச்செலவுகளைக் கணக்கெடுக்கக் கூடாதென்று சொல்லுகிறார்கள். இதற்காகவே நிதர்சனப்படுத்தும் பண்ணைகளென்று சம்சாரிகள் நிலத்திலேயே, சம்சாரிகளைக் கொண்டு விவசாய டிபார்ட் மென்டார் சொல்லும் சீர்திருத்தங்களைக் கையாளும் படிக்கும், அவர்களுக்கு மாமூலாய்க் கிடைக்கும் வருமானத்தோடு அதிகமாய் செலவு செய்த கணக்கையும் சேர்த்து அப்போது கிடைத்த மாசூலிலிருந்து கழித்த பின்னும் இலாபம் வருகிறதென்று ருஜூப் படுத்த ஆங்காங்கு பண்ணைகள் ஸ்தாபித்து வருகிறார்கள். இது ஓர் சிறந்த முறையே, ஆனால் கிருஷிகருக்கு ஓர் அனுமானம் இதில் இருப்பதாக என்னிடம் அனேகர் சொல்லியிருக்கிறார்கள். அதென்னவெனில் இப்போது கண்டு முதலாகும் மாசூல் கணக்கை மாத்திரம் சர்க்காரார் செட்டில் மெண்டுக்கு எடுத்துக் கொண்டு அதிகச் செலவை ஒத்துக் கொள்ள மாட்டார்களென்று சந்தேகப் படுகிறார்கள். அப்படி அவர்கள் சந்தேகப் படுவது சரியல்ல. ஏனென்றால் கவர்ன் மென்ட்டார் அவ்வாறு செய்வதில்லையென்று தெரிவித் திருக்கிறார்கள். இச்சந்தேகத்தை நிவர்த்திக்க எனக்குத் தெரிந்தது 3 வழிகள்தான். முதலாவது; சாஸ்வத நிலத்தீர்வை ஏற்படுத்துவது. இரண்டாவது; அதிக கண்டு முதல் செய்வதற்கு ஏற்பட்டவிதை, எரு, ஆட் செலவு; முதலிய ஒவ்வொன்றுக்கும் இவ்வள விவ்வளவு பிடித்ததென்று, சர்க்காரால் சந்தேகப் படக் கூடாத உயர்தர விவசாய உத்யோகஸ்தர் அத்தாக்ஷிப் பத்திரம் கொடுப்பது. மூன்றாவது; சர்க்காரார் கொடுத்திருக்கும் உருதி மொழியைத் துண்டு பிரசுரங்கள் மூலமாய் பஹிரங்கப் படுத்துவது. இப்போது இங்கு விஜயம் செய்திருக்கும் கனம் பொருந்திய மந்திரியவர்களும் விவசாய டைரெக்டர் துரையவர்களும் இதற்கு தக்கவழி ஏற்படுத்தினால் எல்லா கிருஷிகரும் இம்முறைகளைச் சந்தேகமில்லாமல் கையாளுவார்கள். நிற்க,

யாரைக் கேட்டபோதிலும் இஜ்ஜில்லா நிலங்கள் முன் போல் இப்போது மேனி காண்பதில்லை யென்றும், தாள் மோதிப் போகிற தே யொழிய நெல் சரிவரக் கண்டுமுதலா கிறதில்லை யென்றும் சொல் லுகிறார்கள். முன் எவ்வளவு கொடுத்தது என்பதற்கு திட்டமான ஆதாரங்க ளில்லாவிட்டாலும் "நச்சினார்க்கினியர்" வேலி 1000 கலம் கண்டதாக வர்ணித்தெழுதி யிருக்கிறார். இது இருபோகமும் சேர்ந் திருக்கக்கூடுமென்று நினைக்கிறேன். எப்பொழுதும் வர்ணனைகளில் ஏற்றியே சொல்வது சகஜமென்று வைத்துக் கொண்டாலும் முற்றி லும் உண்மையல்ல வென்று நினைக்கக் கூடாது. ஏனெனில் இன்றும் ஸ்பெயின், இட்டலி, முதலியதேசங்களில் ஏக்கருக்கு 6000 ராத்தல் கண்டு மூதல் ஆகிறது அதாவது வேலிக்கு சுமார் 666 கலம் கண்டு முதலாகிறது. மெஸர்ஸ் பாரிகம்பெனிபாருடைய ராணிப் பேட்டை உரக்கிடங்குக்குச் சமீபமாயிருக்கும் அவர்களுடைய நிரூபணைப் பண்ணையில் அவர்களால் தயாரிக்கப் பட்ட சாஸ்திரீய நெல் உரத்தில் 180 ராத்தல் உரத்தை 32 செண்ட் நிலத்தில் உப யோகித்ததில் ஏக்கருக்கு முதல் போகத்தில் 5034 ராத்தல் வீதமும் 2-ம் போகத்தில் 4584 ராத்தல் வீதமும் மூன்றும் போகத்தில் 4458 ராத்தல் வீதமும் ஆக மொத்தம் 14076 ராத்தல் ஏக்கருக்குக் கண்டு முதலானதாக எழுதியிருக்கிறார்கள். இக்கணக்கை வேலிக்குப் பார்த்தால், வேலிக்கு 1500 கலத்துக்கும் அதிகமாகிறது. இந்நாளில் எழுதிய இதையே நாம் நம்பும்போது அந்நாளில் நச்சினார்க்கினியர் வேலிக்கு 1000 கலம் கண்டதாக எழுதியதை ஏன் நம்பக் கூடாது? மேலும் "திருவாய் மொழியில்"

ஒங்கி உலகளந்த என்னும்பாசுரத்தில் "வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்" என்று பசுக்கள் குடம் பால் கொடுத்ததாக வர்ணனை செய்து எழுதியிருக்கிறது. ஐயா! குடம் பால் கொடுக் கும் பசுக்கள் இருந்ததாக யாராவது நம்புவார்களா? நம்பமாட்டார் கள். ஆனால் உண்மையில் அப்பேர்ப்பட்ட பசுக்கள் அபூர்வமாய் இருந்திருக்கின்றன. இப்போதும் அபூர்வமாய் இருக்கின்றன. நான் இப்போது சொல்வதை உங்களில் சிலர் உண்மையாயிருக்குமா என்று கூட சந்தேகிக்கலாம். நான் சொல்வது பழைய நாள் கதை யல்ல வென்றும் இப்போது சில வருஷங்களுக்கு முன் விவசாய இலா கா முக்கிய உத்யோகஸ்தர் முன்னிலையில் மூன்று வேளை கறந்து பார் த்து கணக்கிடப் பட்ட விஷயமென்றும் தெரிவிக்கிறேன். மாக்ஷி

னை தங்கிய வில்லிங்க்டன் பிரபு அவர்கள் நமது இராஜதானிக்கு கவர்ணராய் வந்த வுடனே திருப்பூரில் நடந்தேறிய கால்நடைக்காக்ஷியில் அதிகப்பால் கொடுக்கும் பசுவுக்குத் தங்கப் பதக்கம் அவர்கள் பேரில் இனாம் கொடுப்பதாகப் பிரசுரம் செய்தார்கள். அப்போது எங்களிடம் வேளைக்கு பட்டணம்படிக்கு 5 படி பால் கொடுக்கும் பசு இருந்தது. அதை மேற்படி போட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னேன். எனது சகோதரரும் அப்போது "கிருஷிகன்" பத்திரிகாசிரியாயிருந்தவருமான ஸ்ரீமான் ரங்கராஜா அவர்கள் அதை போட்டிக்கு அனுப்ப இஷ்டப்படவில்லை ஏனென்றால் அப்பசுவை அனுப்பினால் திருஷ்டி தோஷத்தினால் அப்பசு மறுபடியும் அதிகப் பால் கொடுக்காதென்று திட்டமாய்க்கூறினார். கடைசியாக எனது வேண்டுகோளுக்கிணங்கி ஆஸ்திரேலியாவுக்கும் நெல்லூருக்கும்கலந்துபிறந்து எங்களிடமிருந்த இரு ஜாதி பசுவைக் காக்ஷிக்குக் கொண்டுவந்தார். பரீட்சை செய்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த விவசாய டெப்டி டைரெக்டராகிய ஸ்ரீமான் ராம ரெட்டியார் அவர்கள் முன்னிலையிலும் எல்லா விவசாய, கால்நடைவைத்ய, நிபுணர்கள் முன்னிலையிலும் ஆயிரக் கணக்கான ஜனங்களின் முன்னிலையிலும் கறந்தபோது நுரையுடன் ஒருகுடம் பால் கொடுத்தது. ஒருக்கால் முதல் நாள் சாயங்காலம் கறக்காமல் பாலை மடியில் விட்டு வைத்துக் கறந்ததால் அதிகப் பால் கொடுத்திருக்குமோ என்னும் சந்தேகம் பிறக்கலாம். விவசாய உத்யோகஸ்தர்கள் அவ்வாறு ஏமாறும் பைத்தியக்காரர்களல்ல. சேர்ந்தாணையாய் மூன்றுவேளை கறந்து பார்த்தார்கள். அந்த மூன்று வேளையும் அவ்வாறே வேளைக்குக் குடம் நிறையப் பால் கொடுத்தது. பால் நுரையுடன்குடம் நிறைந்தாலும் எடைபோட்டபோது முதல் நாள் காலை 29 பவுண் அதாவது $7\frac{1}{4}$ பட்டணம் படியும் சாயங்காலம் 27 பவுண் அதாவது $6\frac{3}{4}$ பட்டணம் படியும் மறுநாள் காலையில் 29 பவுண் அதாவது $7\frac{1}{4}$ பட்டணம் படி பாலும் கொடுத்தது. அப் பசுவை அப்போதே கோயம்புத்தூர் சர்க்கார் பண்ணைக்கு விலைக்குக் கேட்க எனது சகோதரர் சந்தோஷமாய் அப்போதே விற்று விட்டார். கனவான்களே! இன்றும் அந்தப் பசு கோயம்புத்தூர் விவசாய காலேஜ் பண்ணையி லிருக்கிறது. ஆனால் என் சகோதரர் எதிர்பார்த்தபடி அமோக பால் கொடுக்கும் சக்தி அப்பசுவுக்கு அத்துடன் போய்விட்டது. காலேஜுக்குக் கொண்டு போனவுடன் முன் கொடுத்ததில் அரை பாகத்துக்கும் குறைவாகவே பால் கொடுத்ததைக் கண்டு டிபார்ட்

மெண்ட்டாரே இதில் ஏதாவது சூதிருக்கக் கூடுமோ எனக் கூட சந்தேகித்தனர். ஆகையால் நமது கவீஸ்வரர்களும், பெரியாரும் ஏதோ சற்று கூட்டி வேண்டுமானல் பாடியிருக்கலாமே யொழிய ஒரே மட்டாய் இல்லாததை உண்டென்று சொல்ல மாட்டார் களெ ன்றே நினைக்கலாம்.

நிற்க இஜ்ஜில்லாவின் கண்டு முதல் வருஷா வருஷம் குறைந்து கொண்டு வருவதில் சந்தேமில்லை. 1923-1924ம் வருஷத்தில் ஏக்க ருக்கு சரா சரியில் 1750 ராத்தல் நெல் அதாவது 700 பட்ணம் படி அல்லது 29 கலம் விளையுமென்று சர்க்காரார் மதிப்ப கிட்டம் போட்டார்கள். ஆனல் மதிப்புப் போட்டதில் 100-க்கு 91 பாகம் அதாவது சராசரி சுமார் 26 கலம் தான் கண்டுமுத லாயிற்று. இதே காலத்தில் பக்க ஜில்லாக்களாகிய மதுரை, திருநெல்வேலி ஜில் லாக்களிலும், கோதாவரி சித்தூர் ஜில்லாக்களிலும் 1900 முதல் 2000 ராத்தல் அதாவது சுமார் 29 முதல் 33 கலம் வரை மாசூல் கொடுத்திருக்கிறது. மேலும் சர்க்காரார் எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாய் நூற்றுக்கு 14 பாகம் வரை அதிக மாசூல் கொடுத்திருக் கிறது. 1924-1925ம் வருஷத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் $24\frac{3}{4}$ கலம் நெல்தான் விளையுமென்று சர்க்காரார் மதிப்பிட்டார்கள். உண்மை யில் சரா சரியில் 22 முதல் 23 கலந்தான் விளைந்தது. அதா வது நூற்றுக்கு சுமார் 84 பாகம் தான். இவ்வருடத்தில் இருக் கும் பரிதாப கரமான நிலைமையைப் பற்றிப் பேசுவதற்கே அதிக விச னத்தைக் கொடுக்கிறது. ஆகவே நிலங்கள் வருஷா வருஷம் கேவல மடைந்து வருகிற தென்பதற்குக் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை.

காரணங்கள்

இவ்வாறு தினேதினே நிலங்கள் க்ஷீணிதயமடைவதற்கு ஏற் பட்ட காரணங்களென்ன வென்பதை ஆராய்வோம்.

இஜ்ஜில்லாவின் ஜனத்தொகை 1900-1901 ல் எடுத்த சென் ஸஸ் கணக்கினல் 11,38,441 என்று தெரிகிறது. பயிரிடும் நஞ்சை நிலமும் ஏறக்குறைய 11 லட்சத்தச் சில்லரை ஏக்கர் தான். ஆகவே ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு ஆள் இருப்பதாகத் தெரிகிறது. மற்ற ஜில்லாக்களில் 100க்கு 80 விவசாயிகளிருக்க இந்த ஜில்லாவில் 100க்கு 65 பேர்தான் விவசாயிகளிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்

கிறது. இதர ஜில்லாக்களில் 100க்கு 46 பாகம் ஜனங்கள் வயல்களில் வேலை செய்ய இந்த ஜில்லாவில் 31 பேர் தான் வேலை செய்வதாய்க் கணக்கிடப் பட்டிருக்கிறது. இதிலும் இந்த ஜில்லா கடையில் தான் நிற்கிறது. ஜனத்தொகையில் 100க்கு 18 பேர் இதர ஜில்லாக்களில் பண்ணை வேலைக் காரராயிருக்க இங்கு 100க்கு 8 பேருக்குக் குறைவாகவே வேலைக்காரரி ருக்கிறார்கள். இதிலும் இந்த ஜில்லா மற்றெல்லா ஜில்லாக்களை விட கடைசி ஸ்தானத்தில் தான் நிற்கிறது. நிலச்சுவான்களில் சில ஜில்லாக்களில் 100க்கு 30பேர் விவசாயம் நேரில் செய்ய இந்த ஜில்லாவில் 100க்கு 11பேர் தான் நேரில் விவசாயம் செய்கிறார்கள். இதிலும் இந்த ஜில்லா கடைசி ஸ்தானத்தைத்தான் பெற்றிருக்கிறது. குத்தகை பெற்று பயிர்செய்யும் ஆள்கள் சில ஜில்லாக்களில் 100க்கு 23பேர் இருக்க இந்த ஜில்லாவில் 100 க்கு 6 பேர் தான் குத்தகைக்கு விவசாயம் செய்கிறார்கள். இவ்விஷயத்திலும் இந்த ஜில்லா தான் கடைசியில் நிற்கிறது. ஆகவே நிலங்களைப் பயிரிடும் அம்சங்கள் எல்லா வற்றிலும் இந்த ஜில்லா கடைசி ஸ்தானத்தைத்தான் பெற்றிருக்கிறதென்று திட்டமாய்த் தெரிகிறது. நஞ்செய் அதிகமாய் பயிர்செய்யும் கோதாவரி, கிருஷ்ணா, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய நான்கு ஜில்லாக்களிலுள்ள நஞ்செய் நிலங்களின் விஸ்தீரணத்தை அந்தந்த ஜில்லாவிலுள்ள மொத்த விஸ்தீரணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது

திருநெல்வேலி	நஞ்சை	0.86	புஞ்சை	5.48
கிருஷ்ணா		1·52		7·54
கோதாவரி		3.72		8.37
தஞ்சாவூர்		3·43		1.63

ஏக்கர்களிருக்கின்றன. அதாவது திருநெல்வேலியில் புஞ்சை நிலத்தில் ஏறக்குறைய 6ல் 1பாகம் நஞ்சையும், கிருஷ்ணாவில் ஏறக்குறைய 4ல் 1பாகம் நஞ்சையும் கோதாவரியில் $2\frac{1}{4}$ல் 1பாகம் நஞ்சையுமிருக்க, தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டும் மற்ற ஜில்லாக்களுக்கு முற்றிலும் மாறாக நஞ்சை புஞ்சையை விட 2 பங்குக்கு மேல் அதிகமாயிருக்கிறது. ஆகவே நஞ்சை நிலம் அதிகமாயிருக்க வேலை செய்யும் ஆட்களோ குறைவாக யிருக்கிறார்கள். இத்துடன் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந் ஜில்லாவி லிருந்து வெளிதேசம் வேலைக்காகப் போகிறார்கள். ஆகையால் சரிவரப் பயிரிடுவதற்கு சாத்யமில்லாமலிருக்கிறது.

விவசாய டிப்பார்ட்மெண்டார் இஜ் ஜில்லாவின் பலபாகங்களிலிருக்கும் நிலங்களின் மண்ணை ரசாயன கூறுபாடு செய்து பார்த்ததில் நிலங்கள் பாஸ்கராமிலம் என்னும் தானிய எருசத்திலும் இந்திரிய வஸ்துவிலும் அதிக குறைவாயிருக்கிறதென்று கண்டு பிடித்தார்கள். பல நூற்றாண்டுகளாக எருவிடாமல் பயிரிட்டு வந்தபோது எவ்வித குறைவில்லாமலிருந்த இந்த ஜில்லா இப்போது இப்படியானதற்குக் காரணமென்னவாயிருக்கலாமென்று யோசித்துப் பார்ப்போம்.

முன்னால் இவ்வளவு நிலங்கள் பயிரிடப் படவில்லை ஜனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க நஞ்செய் சாகுபடிக்கு அதுவரை லாயக்கில்லாதவை யென நினைத்து தரிசாய்க் கிடந்த நிலங்கள் கைப்பற்றுக்கு வந்தன. முன்னால் கொஞ்சம் விஸ்தீரணத்திற்கு பாய்ந்து வந்த அந்த ஜலமே அதிக விஸ்தீரணத்திற்குப் பாயவே, அப்பாகத்திற்கு முன் போனவண்டல் சத்து அளவு குறைந்து விட்டது. பெரிய அணை உயர்த்தி லாக்குகள் ஏற்படுத்திய பின் முன்போல் வண்டல் வருவதில்லை. வருஷா வருஷம் வண்டல் சத்து சேர்ந்து வயல்களில் எக்கல் ஏறிப் போவதால் "குழிவெட்டு" என்று மண்ணை அப்புறப் படுத்த வேண்டியிருக்கிறது. அப்படி மண்ணை அப்புறப் படுத்தும்போது மேல் 9 அங்குலம்வரை படிந்திருக்கும் எருச் சத்தும் இதர சத்துக்களும் அப்புறப் படுத்தும் மண்ணில் சிலபாகம் போய்விட, சத்துக்குறைந்த மண்ணில் சாகுபடி செய்வதால் நிலச்சத்து குறைந்து வருகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் விளைவிக்க குறைந்தது 8 அடி அளவுதண்ணீர் அதாவது 96 அங்குலம் தண்ணீராவது வேண்டியிருக்கிறது அப்படிப் பாயும் தண்ணீரில் வண்டல் மூலமாய் ஒருவருஷத்திற்கு உப்புகாம்தழை சத்து 30ராத்தலும், பிரகாசதாமிலம் (தான்யசத்து) 40 ராத்தலும் எருவாவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள், அந்த 40 ராத்தல் பிரகாச தாமலத்தில் 10 ராத்தல் தான் பயிர்களுக்கு உபகாரப் படக் கூடிய ஸ்திதியிலிருக்கிறது. ஆகவே ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் நெல் பயிருக்கு 30 ராத்தல் உபகாரப்படக்கூடிய பிரகாசதாமலம் கிடைக்க வேண்டியதில் 10ராத்தல்தான் கிடைப்பதால் வருஷா வருஷம் 20 ராத்தல் பிரகாசதாமலம் குறைந்து வந்ததால் தான் தற்காலத்தில் இஜ் ஜில்லாநிலங்கள் பிரகாசதாமில சத்திலும் இந்திரிய வஸ்துவின்

சத்திலும் அதிகமாகக் குறைவடைந்திருக்கிறது. தாள் அதிகமாக மோதி மணி பிடிக்காமலிருப்பதற்கும் இதுவே முக்கிய காரணம்.

இதர ஜில்லாக்களில் வயல்களை நடுவதற்குமுன் செய்யும் செய் நேர்த்தி இஜ் ஜில்லாவில் செய்யப் படுவதில்லை. முக்கியமாய் மற்ற ஜில்லாக்களில் உழுவதைப் போல் இஜ் ஜில்லாவின் நிலங்கள் உழப் படுவதில்லை. நடுவதற்கு முன் மாமடித்தல் இதர ஜில்லாக்களில் கையாளப் படுகிறது. இந்த ஜில்லாவில் மாமடித்தல் இன்னதென்றே அநேகருக்கு சரிவரத் தெரியாதென்றே நினைக்கிறேன். மாமடித்தல் என்பது ஓர்பலகை கொண்டு மேடாயிருக்கப்பட்ட பாகத்திலிருக்கும் சேற்றைத் தள்ளிக் கொண்டுபோய் பள்ளமாயிருக்கும் இடத்தில் விட்டு சமதளப் படுத்தல். அவ்வாறு செய்வதால் தண்ணீர்கொஞ் சமாய்க் கட்டினாலும் தண்ணீர் ஒரே நிதானமாய்க் கட்ட சாத்தியப் படுவதோடு ஒரு பக்கம் பாய்ந்தும் ஒருபக்கம் காய்ந்தும் போகாது.

நடும்போது நாத்துகளை பெரும் பான்மையோர் சிறுக வைத்து நெருக்கி நடுவதில்லை. போதுமான ஆட்களில்லாததால் ஒரு முளத்திற் கொன்றாக நாற்றை குத்துகுத்தாக நட்டுக் கொண்டே போகிறார்கள். ஆகையால் நடுவையும் சரிவர நடத்தப் படுவதில்லை.

திருநெல்வேலி ஜில்லா முதலிய இடங்களில் நெற்பயிருக்கு 2 தரம் சுத்தமாய் களை யெடுக்கிறார்கள். ஒரு ஏக்கர் களை எடுக்க முதல் களைக்கு 20 பெண்களும், இரண்டாவது களைக்கு 10 பெண் களும் பிடிக்கிறது. இந்த ஜில்லாவிலோ 5 முதல் 6 பேரை குத்தகை யாகப் பேசி களையெடுக்க விடுகிறார்கள். அதற்குத் தகுந்தாற் போல் தான் களையும் எடுக்கப் படுமென்பதில் சந்தேக முண்டோ?

நெல் விளையும் இதர பிராந்தியங்களில் காய்ச்சலும் பாய்ச்சலு மாய்த் தண்ணீர் விடுகிறார்கள். அதாவது தண்ணீர் கட்டி வடித்து விடுகிறார்கள். மறுபடியும் நிலம் சற்று காற்றோட்டமடைந்த உடன் மறுபடியும் தண்ணீர் கட்டுகிறார்கள். இஜ்ஜில்லாவிலோ அனேகமாய்

வரப்புயர-நீருயரும்
நீருயர-நெல்லுயரும்,
நெல்லுயரக்-குடிஉயரும்
குடிஉயரக்-கோனுயர்வான்

என்னும் வழக்கச் சொல்லுக்கேற்ப தண்ணீர் ஒரு அடிக் குக் குறையாமல் உயரமாய்க் கட்டுகிறார்கள். வடிப்பதற்கோ பெரும் பாலும் இயற்கைச் சாதனங்களில்லை. நிலம் மேடு

பள்ளமா யிருப்பதால் எல்லாப் பாகங்களிலும் தண்ணீர்பரவு வதற்கும் அதிக வண்டல் படிவதற்கும் இவ்வாறு 1 அடி ஜலம் கட்டு கிறார்கள். காலில் தண்ணீர் தட்டு ஏற்படும்போது பள்ளப் பாகங்கள் மட்டும் பாய்ந்து மேட்டுப் பாகங்கள் காய்ந்து விடுகிறது. அத்துடன் வேர்களுக்கும் கொஞ்சமாவது காற்றோட்டமுண்டாவ தில்லை. மேடு பள்ளமில்லாமல் ஒரே சமதளமாயும் வடிகால் வசதியுமையப் பெறாமலு மிருக்கும் மலையாளத்தில் கூட ஒரு சக்கர இறவை யால் தண்ணீரை அப்புறப் படுத்தி காற்றோட்ட முண்டாக்குகிறார்கள்.

அந்தந்த மிராசுதாரருடையவோ குடிகளுடையவோ மனப் போக்கின் படி தோன்றிய ரினுசுகளைப் பயிரிடுவதால் ஒரு வருக்கு தண்ணீர் தேவையில்லாத போது பக்கத்துப் பயிருக்குத் தண்ணீர் வேண்டியும் ஒரு பக்கத்தில் கதிராயிருக்கும்போது பக் கத்து வயலில் அறுவடை செய்தும் வருவதால் அறுவடை செய்யும் நிலமானது முன் கூட்டியேதண்ணீர் வடித்து காயாமலிருப்பதாலும் சரிவரக் களவசதி யில்லாததாலும் நெல் அடித்த உடனே ஈரவைக் கோலை போர்போட்டு வைப்பதால் மக்கியும் அழுகியும் போய் விடு கிறது. சூடடிப்பு நெல்லும் மக்கிப்போகிறது. போரடித்த நெல் லையே கூலிக்காரருக்கும் படி ஆள்களுக்கும் கூலி கொடுக்க வே ண்டி யிருக்கிறது. கூடிய வரையில் ஒற்றுமையாய் ஒவ்வொரு பிராந்தியத்தில் ஒரே மாதிரியான நெல்லை ஒரே சமையத்தில் பயிரிடுவது இலாபகரமா யிருக்கும். இருபோக நஞ்செய் நிலங்களின் முதல்மாகுல் செப்டம்பர் மாதத்தில் அறுவடைக்கு வருகிறது. அதற்கு முன் கூட்டியேஒருபோக நிலத்தில் பயிர் ஏறி விடுவதாலும் அதற்குத் தண்ணீர் அக்காலத்தில் அவசிய மிருப்பதாலும் இரு போக நஞ்செய் நிலத்திலும் இக்கஷ்டம் ஏற்படுகிறது. இடத்திற் கேற்ற வாறு ஒற்றுமையாய் வேலை செய்தால் இக்கஷ்டத்தையும் நிவர்த்திக்கலாம். மற்ற ஜில்லாக்களில் புழுதிக் காலில் கை விதை யாகவும் விதைக் கலப் பையிலும் முதல்பயிர் விதைக்கப் படுகிறது. சேற்றிலும் முளை கட்டி விதைக்கிறார்கள். இந்த ஜில்லாவிலோ முழு வதும் நட்டே தீர வேண்டியிருக்கிறது.

எவ்வாறு நிவர்த்திப்பது.

இப்போது சொன்ன குறைகளி லெல்லாம் நிலத்தில் இந்தி ரிய வஸ்துவும், பாஸ்கார மிலமும் குறைவாயிருப்பதை நிவர்த்திப்ப தே முக்கியமானது. ஏனென்றால் மற்றவைகளெல்லாம் ஒற்றுமை

யாய் வேலை செய்வதாலோ அல்லது சற்று ஜாக்ரதையுடன் பயிர் செய்வதாலோ நீக்கக் கூடுமென்றும் இதை நிவர்த்திப்பதே கஷ்ட மான விஷய மென்றும் கருதி விவசாய டிபார்ட்மெண்ட்டார் இப்பெ ரும் குறைவை நிவர்த்திப்பதற்காக மங்கநல்லூரில் ஒரு பண்ணை அமைத்து அதில் 10 வருஷங்களாகப் பல ரீட்சைகள் நடத்திப்பார் த்தார்கள். அப்பரீட்சைகளி லிருந்து நான் தெரிந்து கொண்டதெ ன்ன வென்றால் (a) தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் நஞ்சை பூமிகளுக்கு பசுந்தாள் எருகொடுப்பதால் மண்ணின் இயல்பை மாற்றினாலும் திட்டமாய் ஜாஸ்தி மாசூல் கொடுக்கு மென்று சொல்வதற்கில்லை.

(b) தழை எருவுடன் வேறு ரசாயன எருக்களைக் கொடுத்த போதிலும் அதனாலும் அதிக மாசூல் பெற முடியாது.

(c) தொழு எருவை உபயோகித்துப் பார்த்ததில் எப்போதும் நல்ல பயனைக் கொடுத்திருப்பதுடன், அத்துடன் தான்ய சத்தைக் கொடுக்கக்கூடிய எருக்களைச் சேர்த்து உபயோகிப்பதால் முதல் போகத்திற்கு உபயோகப்படுவதுடன் 2ம் போகத்திற்கும் உபயோ கப் படுவதாகத் தெரிகிறது.

(d) தான்ய சத்தைக் கொடுக்கக் கூடிய சூபர்பாஸ்பேட் போன்ற ரசாயன எருவை மாத்திரம் உபயோகித்தால் முதல் போகத்திற்கு மாத்திரம் உபகாரப்பட்டு 2வது போகத்தில் பலன் கொடுப்பதில்லை யென்று தெரிகிறது.

(e) ஏக்கருக்கு 20 ராத்தல் தானியசத்தைக் கொடுக்கக் கூடிய சூப்பர்பாஸ்பேட், எலும்புத்தூள், பாரைபாஸ்பேட் தனித்தனி உப யோகித்ததில் சூப்பர் பாஸ்பேட் மட்டும் உபயோகித்ததில் முதல் வருஷம் அதிக மாசூலையும் வரவர அதற்குக் குறைந்த மாசூலையும் கொடுத்திருக்க, தான்யசத்தும் தழை சத்தும் சேர்ந்த எலும்புத்தூள் போன்ற எருக்கள் முதலில் சூப்பர்பாஸ்பேட்டைப்போல் அதிக மா சூல் கொடுக்கா விட்டாலும், வருஷாவருஷம் விருத்தியாவதால் நில வளம் அதிகரிக்கச் செய்கிற தென்பதை ருஜுப்படுத்துகிறது.

(f) சூப்பர்பாஸ்பேட் எருக்கொடுத்த நிலத்தில் ஒரே அளவு தழை சத்தைக் கொடுக்கக்கூடிய அம்மோனியம் சல்பேட்டை ஒரு பக்கத்திலும் பசுந்தாள் எருவை அதே தழையின் மற்றபக்கத்திலும் கொடுத்ததில், அம்மோனியம் சல்பேட் எருப்போட்ட துண்டு

சற்று அதிக வைக்கோலைக் கொடுத்ததே தவிர, தானிய சத்து கொடுத்து துண்டைவிட அதிக மாசூல் கொடுக்கவில்லை.

(g) தான்யசத்தைக் கொடுக்கக்கூடிய எலும்புத்தூள் சூபர்பாஸ்பேட் முதலிய எருக்களை (20 ராத்தல் பாஸ்காரமில சத்தைக் கொடுக்கக்கூடிய அளவுக்குமேல்) அதாவது எலும்புத்தூள், ஒரு அந்தருக்கு மேலும் சூப்பர்பாஸ்பேட் 2½ அந்தருக்கு மேலும் உபயோகப்படுத்துவது லாபகர மல்லவென்று தெரிகிறது. ஆகையால் எலும்புத்தூளை வருஷா வருஷம் ஏக்கர் 1க்கு 80 ராத்தலுக்குக் குறையாமலும் 100 ராத்தலுக்கு மேல் போகாமலும் உபயோகித்து வந்தால் ஒரு ஏக்கருக்குப் போதுமான தான்ய சத்து கொடுக்கிறதென்றும் தெரிகிறது.

விவசாய டிபார்ட்மெண்டார் 1923—1924ம் ஆ விவசாயப் பஞ்சாங்கத்தில் விவசாய ரசாயன சாஸ்திரியான டாக்டர் ராய்லண்ட் வி. நாரிஸ் துரையவர்கள் தான்ய சத்தைக் கொடுக்கக்கூடிய எருக்களில் எலும்புத்தூள் தான் சிறந்த எருக்களில் ஒன்றென்றும் எல்லாவற்றிலும் சகாயமானதென்றும், நீடித்து பலன் கொடுக்கக்கூடியதென்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த எருவானது இந்த ஜில்லாவில் வேண்டிய அளவு இருப்பதை நீங்கள் கவனியாததால் அயல் நாட்டாரும், டீ, காப்பி, ரப்பர் முதலியன பயிரிடுவோரும், ரெயில் சார்ஜ், வியாபாரிகள் இலாபம், முதலியன கொடுத்துக் கொண்டு போகிறார்கள். நீங்கள் இனியாவது சிரத்தை எடுத்து வேலையில்லாத காலங்களில் எலும்புகளை சேகரிக்கும்படி தூண்டி, தூளாக்கி உபயோகிப்பது நலம்.

நான் எப்போதும் கிருஷிகர் சுலபமாய் பெறக் கூடிய எருவகைகளையும், கஷ்டமில்லாமல் எல்லோரும் கையாளக் கூடிய முறைகளையும் செய்யும்படி சொல்வது எனது இயற்கையேயொழிய கண்ணுக்குத் தெரியாததும் வெளியிலிருந்து கொண்டுவந்து விற்று வரும் எருக்களை அவசியம் நேரிட்டாலொழிய சிபார்சு செய்யும் சுபாவமில்லாத பழைய நாள் பைத்தியக்காரனாதலால், இப்போது சுலபமாய் உங்களால் கையாளக் கூடிய முறைகளைச் சொல்லுகிறேன்.

இந்த ஜில்லாவில் பொலி எருதுகள்	2304 ம்
இதர எருதுகள்	15719 ம்
மாடுகள்	379026 ம்
பசுக்கள்	277946 ம்
கன்றுகள் 173063—8 கன்றுகள் 1 மாட்டுக்குச் சமானமானதால் 173063ல் 8ல் 1 பாகம்	21633 ம்

எருமைக்கிடாக்கள்	51248 ம்
எருமைகள்	115487 ம்
ஷை கன்றுகள் 52374ல் 8ல் 1பாகம்	6547 ம்
ஆக எட்டுலட்சத்து எழுபதாயிரத்து நூற்றுபத்து	870110

ஆடுகள் 268007
வெள்ளாடு 637069

905076 ல் 8ல் 1பாகம் 113135 ம்

(ஆக மொத்தம் 9 லட்சத்து 83 ஆயிரத்து 245) 983245

மாடுகள் இருக்கின்றன வென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. ஒருசாதாரண மாட்டிலிருந்து வருஷம் 1க்கு கிடைக்கும் எரு சராசரி சாணி 3000 ராத்தல் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த 3000 ராத்தல் சாணியில்நைட்ரஜன்உப்புவாய்வுஅதாவதது தழைசத்துஎரு 30ராத்தலும்பொட்டாசியம்|அல்லது சாம்பல் காரம் 30 ராத்தல் இடையும், பாஸ்கராமிலம் அதாவது தான்யசத்து எரு40 ராத்தலும்இருக்கிறது. ஆகவே ஒருமாட்டிலிருந்து ஒரு வருஷத்திற் கிடைக்கும் சாணி எருவை உங்கள் ஒரு ஏக்கர் நிலத்திற்குப் போடுவீர்களாகில் நிலத்திலிருந்து ஒருஏக்கர் சாகுபடி செய்வதால் வைக்கோலிலும் தானியத்திலும் செலவாகும் பயிருணவுப் பொருள் களுக்கு அதிகமாகவே இருப்பதால் நிலம் நாளுக்கு நாள் விருத்தியாகி அதிகமாகுலைக் கொடுக்கு மென்பதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை. அதைவிட்டு இந்திரிய வஸ்திலும் தானிய சத்திலும் குறைவா யிருக்கும் உங்கள் நிலங்களுக்கு இந்திரிய வஸ்துவே இல்லாத ரசாயன எருக்களைப் போடுவது பசியோடிருக்கும் ஒருஆளுக்கு கால்படி அரிசி சாதத்தைப் போடுவதற்குப் பதிலாக கால்படி அரிசி சாதத்தில் எவ்வளவு சத்துஇருக்கிறதோ அதே சத்துள்ள கொஞ்சம் அசல்பாதம் அல்வாவைக் கொடுத்துப் பசிதீர்த்துக் கொள்ளச் சொல்வதைப் போலிருக்கும். கொஞ்சம் அசல் பாதம் அல்வாவில் $\frac{1}{4}$ படி அரிசு சமைத்த சாதத்திலிருக்கும் சத்துப் பொருள்கள் இருப்பது சாஸ்திரீயரீதியாய் சரியே. ஆனால்பசியோடிருப்பவனுக்கு கொஞ்சம் அசல்பாதம் அல்வா பசியைத் தீர்த்து விடுமாயென்பதை மட்டும் கவனிக்கக் கோருகிறேன். அவ்வாறு கொஞ்சம் அசல்பாதம் அல்வாவினால் பசியோடிருக்கும் ஒருவனு

டைய பசி தீர்ந்து விடும் என்பதை நீங்கள் நம்புவ தானுல் அப்போது இந்திர வஸ்துக்க ளில்லாத ரசாயன எருக் களை மாத்திரம் தாராளமாய் உபயோகிக்கலாம். கனவான்களே! நமது ஊரில் நமது தொழுவத்தில் நமது நிலங்களுக்கு வேண்டிய தொழு எரு ஏறக்குறைய வேண்டிய அளவு இருக்கும் போது, அதை நாம் விரட்டிகளாகத் தட்டி விற்றும், வேறு விதமாய் உபயோகித் தும் செலவு செய்து விட்டு ரசாயன எருக்களைத்தேடிப் போக வேண் டிய பிரமேய மென்ன? உங்கள் ஜில்லாவில் உங்களுக்கு வேண்டிய மாட்டெரு அகப்படாது என்னும் ஓர் தவருன கொள்கையிருக் கிறது. அது சரியல்ல வென்று நான் ரூபிக்கிறேன். சில நிமிஷங் களுக்கு முன் நான் சொன்ன கணக்கிலிருந்து நஞ்செய் சாகுபடி யாகும் சுமார் 10 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு, 10 லட்சம் மாடுகளு க்கு சற்று குறைவாய் இருப்பதாகச் சொன்னேன். ஏறக்குறைய 1 ஏக்கர் நிலத்திற்கு 1 மாடு இருப்பதால் நீங்கள் சாணியை அவம் போ க்காமலும் எரிக்காமலும் பந்தோபஸ்து செய்வதற்கு பிரயத்தனம் செய்வீர்களாகில் நீங்கள் வேறு எரு தேடிப்போக வேண்டிய பிரமேய மில்லை. ஆனல் சாணி மொத்தத்தையும் சேகரிப்பது சாத்திய மில் லை யென்றும் விறட்டி தட்டுவதைத் தடுக்கக் கூடவில்லை யென்றும் சொல்லு வீர்களாகில், விறட்டி தட்டுவது குற்ற மென்று சட்டசபை யின் மூலமாய்த் தீர்மானித்து அமுலுக்குக் கொண்டு வந்தால் அது முதலில் கஷ்டமாகத் தோற்றினும் வர வர அதன் அனுகூலங்கள் தெரியாமற் போகாது. இப்படிச் செய்வதும் சாத்தியமல்ல வென்று காண்பீர்களாகில் உங்களுடைய ஜில்லாவில் விளையும் 14293 டன் கடலைப் புண்ணாக்கைக் கொடுக்கக் கூடிய நிலக்கடலையை அயல் தேசத்தாருக்கு விற்று விட்டு நீங்கள் ஏன் ரெயில் செலவு செய்து வெளியிலிருந்து உரங்களைத் தருவிக்க வேண்டும். கனவான்களே! நம்மிட மிருந்து புண்ணாக்குகளை விலைக்கு வாங்கி ரெயில் சார்ஜ், கப் பல் சார்ஜ், மத்திய வியாபாரிகள் கமிஷன் ஆகிய இவைகளை யெல்லா ம் கொடுத்து வாங்கிக் கொண்டு போய் உபயோகிக்கும் மேல் நாட் டாரும் நமது இராஜதானியிலேயே இருக்கும், டீ, காப்பி, ரப்பர் முதலியன பயிர் செய்வோரும் அவி விவேகிகளென்று நீங்கள் நினைக் கிறீர்களா? ரசாயன எருக்களை உற்பத்தி செய்வோரே ரசாயன எருக்களை உபயோகிக்காமல் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுடன் நமது தேசத்திலிருந்து ஏன், புண்ணாக்கு, எலும்பு, ஜவ்வு, கொம்பு

கொளம்பு, மீன் எரு, முதலிய இந்திர வஸ்துக்களடங்கிய எருக்களை வாங்கிக் கொண்டு போகிறார்கள்? இவ்வளவு செலவுகள் செய்தபின் அவர்களுக்கு உபகாரப்படும் புண்ணாக்கு எலும்பு முதலிய நமது எருக்கள் செலவுகளில்லாமல் நமக்கு அனுகூலத்தைக் கொடுக்குமா கொடுக்காதா என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

மனிதர்கள் கழிக்கும் மலத்தை கட்டு திட்டம் செய்து சேகரிப்பதால் கிராமம் சுகாதாரமா யிருப்பதுடன் சிறந்த எருவுமாகும். ஜப்பானியர் சைனு தேசத்தார் இதை கவனித்து நடத்தி அதிக இலாபம் அடைகிறார்கள். இதையும் கவனிப்பது சிலாக்கியமாகும்.

சமீபத்தில் ஸ்ரீமான் B. V. நாத் என்பவரும் கர்னல் மெக்காரிசனும் ரசாயன எருக்களை உபயோகிப்பதால் பிராணுபி விர்த்தினி என்று சொல்லும் "வைடாமின்" என்னும் சத்து தானியத்தில் இல்லையென்றும், அச்சத்து இல்லாத தானியம் சக்கைக்குச்சமானமென்றும் பரீட்சைகளால் கண்டு பிடித்தார்கள். நாம் தற்காலம் நாளுக்கு நாள் க்ஷீணித்து பலம் குறைந்து போவதற்கு இதுவேகாரணமாயிருக்கலாமென்று கனம் பொருந்திய சர்ஜன் ஜெனரல் துரையவர்கள் இப்போது நடந்த விவசாய ராயல் கமிஷன் விசாரணையில் தெரிவித்திருக்கிறார்கள். இது போக சிலாக்யகரமாய் விவசாய டிபார்ட்மெண்ட்டாரால் பொறுக்கி எடுத்து கொடுக்கப் பட்ட விதைகள் இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்கள் அல்லாத ரசாயன எருக்களை உபயோகித்த நிலங்களில் விதைத்துப் பயிர் செய்தால் அதிலிருந்து உண்டாகும் தானியங்களில் சத்து குறைவாயிருப்பதோடு ராசியும் காண்பதில்லை. ஆகையால் இந்திரிய வஸ்துக்களில்லாத ரசாயன எருக்களை மாத்திரம் உபயோகிப்பதில் கெடுதல் உண்டாகுமென்று எச்சரிக்கிறேன்.

ஆடுதுறை பண்ணையில் சர்க்காரால் தெரிந்தெடுத்த விதைகளை வாங்கி உபயோகித்ததில் உங்களில் பலர் முன் அடைந்த மகசூலைவிட அதிகமகசூல் அடைந்திருக்கிறீர்களாதலால் அதனுடைய உபகாரமும் முக்யமும் உங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இப்பண்ணையில் வெளியூர்களில் நல்ல மகசூல் கொடுக்கும் தினுசுகளைத் தெரிந்து அதில் சிலாக்யமான விதைகளை வரவழைத்து பல வருஷங்கள் பரீட்சித்துப் பார்த்து எது சிலாக்யமான பலனைக் கொடுக்கிறதோ அதை கிருஷிகருக்கு கொடுத்துக் கையாளும் படி செய்வது ஒன்று. இப்படித் தெரிந்தெடுத்த ஜாதிகளில் நெல்லூர்

சம்பா அனுபோகத்தில் நல்ல மாசூல் கொடுப்பதாக உங்களுக்குத் தெரியும். இரண்டாவது; இந்த ஜில்லாவில் தற்காலம் பயிரிடப்பட்டு வரும் ஜாதிகளில் நோய் நொடிக ளில்லாததும், திறமான மணிப் பிடியுள்ளதும், கதிர் நீட்டமாயு மிருக்கும் கதிர்களைத் தெரிந் தெடுத்து பொறுக்கி அதை விதைத்து அதிலிருந்து தனிமுதலாகத் தெரிந்தெடுத்து அதிலிருந்து விருத்தி செய்த நெல்லை விதைப்பதில் முன்னையைவிட 100க்கு 15பாகம் அதிக மாசூல் கொடுக்கிறதும் உங்களுக்குத் தெரியும்.

மூன்றாவது சாஸ்திரயுக்தமான ஒருதினுசு நெல்லின்மகரந்தத் தைஇன்னொருதினுசு நெல்லின் மகரந்தத்தோடு கலப்பித்து அதன் மூலமாய் சிலாக்யமான தினுசை உண்டாக்கி பரவச் செய்வது.

இம்மூன்று தினுசுவேலைகளில் முதலாவது மூன்றாவதாகச் சொன்ன மார்க்கங்களை விட்டு, சுலபமாய் நீங்கள் கையாளக் கூடியதும், உங்களுடைய வேலைக்காரரும் எளிதில் கற்றுப் பழகக்கூடியதுமான இரண்டாவதாகச் சொன்ன முறையை, சிலதினங்களில் இப்பண்ணையில் பழகித் தெரிந்து கொண்டு அவரவர் கள் அவ்வவ்விடங்களில பயிர் செய்து வரும் பலதினுசு நெல் களிலும் பொருக்கி, தெரிந்தெடுத்து கையாடிப் பார்த்தால் இப்போது நீங்கள் எதிர்பாராத அவ்வளவு நன்மை அடையக் கூடும். சிலதினுசு நெல்களை இவ்வாறு தெரிந்தெடுத்துக் காட்டுவது விவசாய டிபார்ட் மெண்ட்டாருக்கு சாத்யமேயொழிய இஜ்ஜில்லாவில் அந்தந்த இடங் களின் பாய்ச்சலுக்கும் இதரகாரணகாரியங்களுக்கும் ஏற்றதாய்ப் பயிரிடப்படும் நூற்றுக்கணக்கான ஜாதிகளைத் தெரிந் தெடுத்து கொடுப்பதற்கு பல நூற்றாண்டுகள் பிடிக்கும். நீங்கள் அம்முறையை அனுசரித்து உங்கள் நிலத்தில் தற்காலம் பயிர் செய்து வரும் தினு சுகளின் விதைகளைப் பொறுக்கி சிலவருஷங்களில் விருத்திக்குக் கொண்டுவந்து விடக் கூடும். ஏனெனில இந்த இரண்டாவதாகச் சொன்ன அபிவிருத்திக்கு அதிக சாஸ்திரீய ஞானம் அவசியமில்லை.

முதலாவதாகச் சொன்ன முறையில் அனுகூலப்படஹேது விருந்தாலும் இலாடநஷ்டங்களைக் கருதாமல் பரீட்சைசெய்து பார்ப் பது சர்க்காருக்கும், ஊக்கமுள்ள பிரபல மிராசுதாரர்களுக்கும் சாத் யமே தவிர சாதாரண கிருஷிகருக்கு சாத்தியமல்ல.

மூன்றாவதாகச் சொன்ன சாஸ்திரீய முறையைக் கையாடுவதற்கு விசேஷ சாஸ்திரீய ஞானம் வேண்டுவதோடு அவ்வளவு கஷ்டப்பட்டு கண்டுபிடித்த தினுசைக் கலப்பில்லாமல் வைத்திருப்பது சாதாரணக் கிருஷிகருக்கு சாத்யமல்ல வென்றே சொல்ல வேண்டும். எப்படி யென்றால் இவ்வளவு கஷ்டப்பட்டு தெரிந்தெடுத்த விதையை ஒருவயலில் விதைத்தால், தண்ணீரின் மூலமாய் வேறுதினுசு விதைகள் வந்து கலந்து விட்டாலும், பக்கத்து வயல்களில் பயிர் செய்யும் இதரஜாதி நெல்லின் மகரந்தம் இவ்வளவு கஷ்டப்பட்டு தெரிந்தெடுத்த தினுசின் மகரந்தத்துடன் கலந்துவிட்டாலும் உபகாரமில்லாமற் போய்விடும். ஆகையால் அம்முறை சாதாரண கிருஷிகரால் கையாளக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை.

இதர ஜில்லாக்களி லெல்லாம் நஞ்செய் நிலங்களில் தண்ணீர் தட்டு ஏற்பட்டால் ஒருதண்ணீர் இரண்டு தண்ணீர் இறைத்து பயிர் தீய்ந்து போகாமல் செய்வதற்கு கிணறுகள் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் அப்பேர்ப்பட்ட ஏற்பாடுகள் அனேகமாய் இல்லை. சர்க்கார் பண்ணைக்கு நாற்றுப் பாவு வதற்குக்கூட தண்ணீர் விடாமல் தண்ணீர் பாசன டிபார்ட்மெண்டார் அக்ரமம் செய்ததாக விவசாய டைரெக்டர் துரை அவர்கள் விவசாய ராயல் கமிஷன் முன்பு சொன்னார்கள்; அதை வாசித்தபோது நான் அதிக சந்தோஷப் பட்டேன். ஏனென்றால் குடிகளுக்கு மாமூலாய் ஏற்படும் அக்கஷ்டம் விவசாய டிபார்ட்மென்ட்டுக்கு ஏற்பட்டதால் தான் டைரெக்டர் துரையவர்கள் விவசாய ராயல் கமிஷனில் சொல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதென்றும் அதன் மூலமாய் இனியாவது ஒரு விமோசனம் பிறக்கக் கூடுமென்றம் எதிர் பார்க்கிறேன்.

இந்த ஜில்லாவில் தென்னை மரங்கள் 31700 ஏக்கர் நிலத்தில் பயிரிடப் படுகிறது. இப்பயிரில் இஜ்ஜில்லா 4 வது ஸ்தானத்தைப் பெற்றிருந்தும் மரங்கள் 10 அடி தூரத்திற் கொன்றாக நெருக்கி நடப்பட்டிருப்பதால் அவைகள் சரியான மாசூலைக் கொடுப்பதில்லை. மத்தியில் ஒவ்வொரு செடியை அப்புறப் படுத்தி விடுவதோடு, தென்னை மரங்களைச் சுற்றி நாலுபக்கங்களிலும் 4 அடி தூரத்திற்கு கெடப்பாறை கொண்டு ஒரு அடி ஆழத்திற்கு வெட்டி வேர்களை அறும்படி செய்து நன்றாய் மண்காய்ந்தபின் ஒரு மாதத்திற்கு 2சுமை பசுந்தாள் தழையும் 10 ராத்தல் மீன் எரு அல்லது எலும்புத்தூள் போட்டால் அமோகமான இலாபம் அடையக்கூடும்

இஜ்ஜில்லாவில் வேதாரண்யத்திலும் படுகை நிலங்களிலும் விசேஷமாய்ப் புகையிலைச் சாகுபடி செய்யப்படுகிறது. பயிர் திடமாய் விளைந்தாலும், புகையிலை உயர்தர சுருட்டுகளுக்கு உபயோகப்படக் கூடிய தினுசுகளும் பதம் செய்யும் விதங்களும் இங்குள்ளவர்களுக்குத் தெரியவில்லையாதலால், அயல் நாட்டிலிருந்து பதம் செய்வதிலிருக்கும் உண்மையான இரகசியங்களைக் கற்பிக்கக் கூடிய ஓர் நிபுணரை வரவழைத்துச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றி கிருஷிகரிடம் அதிக அனுதாபமுள்ளவர்களும் இப்போது இங்கு ஆஜராயிருக்கும் கனம் மந்திரியவர்களை அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்வது நலமென நினைக்கிறேன்.

இஜ்ஜில்லாவிலுள்ள மாடுகளுக்குப் போதுமான அளவு வைக்கோல் இல்லையாதலால் கிருஷிகர் அதிக கஷ்டப் படுகிறார்கள். எப்போது தீவனத்தட்டு ஏற்பட்டதோ அப்போது மாடுகள் க்ஷீணிதமடையும். மாடுகள் க்ஷீணிதமடைந்தால் சரியானபடி உளவு செய்யமுடியாது. சரியானபடி உளவுசெய்யாவிட்டால் கேவலமான பயிருண்டாகும். பயிர் கேவலமடைந்தால் தானியம் குறைந்து போம். ஆகையால் இதை நிவர்த்திப்பது அவசியம். எக்கல் ஏறும் மண்ணை ஆங்காங்கு எடுத்துப் போட்டு மேடுகளாக்கியிருக்கும் நிலங்களைச் சுற்றிலும், வரப்போரங்களிலும் கினியாப் புல் முதல்களைக் கொண்டு வந்து ஒவ்வொன்றாக நட்டுவிட்டால், ஒன்று நூறாக மூடுகட்டி வேண்டிய அளவு பசும்புல் கொடுக்கும். வேண்டியபோது அறுத்துக் கொள்ளலாம்.

நான் பேச ஆரம்பித்தபோது ஒரு ஜில்லாவின் அபிவிருத்தி அங்குள்ளவர்களின் கல்வியிலிருந்து தெரிந்து கொள்ளலாமென்றும் இஜ்ஜில்லாவில் 100-க்கு 20 பேர் படித்தவர்களிருப்பதற்காகச் சந்தோஷப் படுவதாகவும் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்குமென்றே நம்புகிறேன். தற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் சொல்லி வைக்கும் கல்வி நமக்கு அதாவது முக்கியமாய் கிருஷிகருக்கு பிரதிகூலத்தை உண்டு பண்ணுகிறதே தவிர நன்மையைக் கொடுக்கவில்லை. படிக்க ஆரம்பிப்போரில் 100-க்கு 15 பேர் பிரைமரி படிப்புடன் நின்று விடுகிறார்கள். ஏழைக் கிருஷிகனுடைய பிள்ளையாயினும் படித்தது 2 வது மூன்றாவது அல்லது பிரைமரிவகுப்புவரை

யிலிருந்தாலும் சரி, படிக்க ஆரம்பித்த உடனேயே விவசாய வேலை கள் செய்வது அகெளரவமென எண்ணி அதுமுதல் வேலை செய்வ தில்லை, உயர்தரப் படிப்புக்குப் போகாததால் சர்க்கார் வேலைக்கும் போவதற் கில்லை. ஆகவே எவ்வித வேலைக்கும் லாயக்கில்லாமல் சோம்பேறியாயோ, திண்ணை தூங்கியாயோ எவ்விதமோ உப யோகமற்ற ஜென்மமாகி விடுகிறான். ஆகையால் பள்ளிக்கூடங்களில் எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பதோடு ஏதாவது ஒரு தொழிற் கல்வியும் கட்டாயமாயும் முக்கியமானதாயும் கற்பிக்கப் படவேண்டும். கனவான்களே! சுமார் 20 வருஷங்களுக்கு முன்னாலேயே ஜப்பான் தேசத்தில் பிரைமரி பாடசாலையில் விவசாயம் கற்றுக் கொடுக்கும் பாடசாலைகள் 1533 இருந்தன. இப்போது எத்தனை ஆயிரம் பாட சாலைக ளிருக்கின்றனவோ தெரியாது. இந்த ஜில்லாவில் சென்றவரு ஷம் நடந்த உங்கள் வருஷாந்திரக் கூட்டத்தில் ஒரு விவசாயப் பாடசாலை ஏற்படுத்த வேண்டு மென்ற பிரேரேபணையை நிறை வேற்றினீர்கள். எக்காரணத்தாலே, அப்பாடசாலை இன்னும் ஆரம் பிக்கப்படவில்லை. கனவான்களே! நான் என் மனதில் தோன்றுவதை பஹிரங்கமாய்ச் சொல்லுவதற்காக என்பேரில் கோபங் கொள்ள வேண்டாம். மிராசு தாரர்கள் வருஷத்திற் கொருமுறை கூட்டங்கூடி ஏதோ பிரேரேபணைகளைக் கொண்டுவந்து நிறைவேற்றி விட்டு அப்பால் அதைப் பற்றி சிந்தியாமலே இருந்து விடும் வரையில் நமது காரியங்கள் திருப்திகரமாய் நடந்தேற மாட்டாது. ஏன் என்பீர்களோ? இந்தஸ்தாபனங்கள் சரியான வகையில் ஆரம்பிக்கப் படாததுதான். இப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்கள் முதலில் கிராம ஸ்தாபனங்களாக யிருந்து பட்டண ஸ்தாபனங் களாகி, தாலுக்கா ஸ்தாபனங்களாகி அப்பால் ஜில்லா ஸ்தாபனங் களாக ஏற்பட்டால் அநேக ஆயிர ஜனங் களின் அபிப்பிராயங்கள் கலந்திருப்பதால் நிறை வேற்றும் பிரேரேபணைகளும் போதுமான யோசனையின் பேரில் கொண்டு வந்து நியைவேற்றப்படும். அப்பிரேரேபணைகளுக்குக் கட்டுப் பட்டு நடப்பதற்கும் பலஆயிர ஜனங்களிருப்பார்கள். இது ஓர் பெரிய விஷயமாதலாலும் என்னைவிட அதிக சாமர்த்திய முள்ளவர்களால் கையாளப்பட வேண்டிய விஷயமாதலாலும் அதைப்பற்றி இச் சந்தர்ப்பத்தில் விரிக்காமல் விட்டு விடுகிறேன்.

கடைசியாக தற்காலத்திலிருக்கும் கிருஷிகருடைய பரிதாப்மான நிலமை கூட்டுறவு சங்கங்களாலும் கிராம பஞ்சாயத்துகளாலும் நிவர்த்தியாகக் கூடுமேதவிரவேறுவிதமாய் விமோசன முண்டாகாது, தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை கடன் கொடுக்கும் நாணயச்சங்கங்களே. அவைகளின் நோக்கங்கள் சரியானபடி இருப்பினும் கையாளும் முறையும் பராமரிப்பும் அவ்வளவு திருப்தி கரமாயில்லையென்று சொல்ல நான் வருத்தப்படுகிறேன். இவ்விஷயத்தைப் பற்றி நான் அதிகாரத்தோடு பேசஅருகனல்லவாயினும் என் அனுபோகத்தில் பார்த்ததைக் கொண்டே மேற் சொன்னவாறு அபிப்பிராயப் பட்டேன்.

என்னென்ன விதமாய்க் கூட்டுறவு சங்கங்களும் கிராம பஞ்சாயத்துகளும் கிருஷிகருக்கு அனுகூலம் செய்யக்கூடு மென்பதைச் சொல்லுகிறேன். இங்கு வந்திருக்கும் அநேக கூட்டுறவு ஸ்தாபன அங்கத்தினர் நான் சொல்லுகிறபடி கூட்டுறவுச் சங்கங்கள் செய்யக் கூடுமா கூடாதா என்பதைப்பற்றி சிந்தித்து தீர்க்காலோசனை செய்து சாத்யமென்று தோன்றினல் அவ்வாறு நடத்தும்படி கெட்டுக் கொள்ளுகிறேன்.

(1) நல்ல நெல் விதைகளை அறுப்புக் காலத்தில் தெரிந்தெடுத்தி வைத்து விதைப்புக் காலத்தில் அங்கத்தினருக்கு நியாயமான விலைக்கு விற்று உதவிபுரிதல்.

(2) பயிர் அறுவடைக்கு வருமுன் சர்க்கார் முதல் கிஸ்தி கட்ட வேண்டியிருப்பதால் வயலிலிருக்கும் பயிரை ஈடு வைத்துக் கொண்டு நியாயமான வட்டிக்கு ரூபாய்கள் கொடுத்து உதவுதல். ஷை சங்கங்களில் இரண்டு மூன்று தற்காலத்தில் ஸ்தாபிதமாகியிருப்பினும் இன்னும் அதிகமாய்ப் பரவ வேண்டும்.

(3) இஜ்ஜில்லா விலுள்ள கிருஷிகருடைய கால் நடைகளை நியாயமான தொகை பெற்று சால்நடை இன்ஷூறன்ஸ் செய்தல்.

(4) அதைப் போலவே பயிர் நடுவதற்குமுன் விளைவை இன்ஷூர் செய்து கொண்டு தீய்ந்து போனால் அத்தொகை கொடுத்து உபகரித்தல். விளையும் காலங்களில் இன்ஷூரன்சுக்காக சொல்ப தொகை கொடுப்பது கிருஷிகருக்குக் கஷ்டமல்ல. தீவேற்பட்டால் அப்போது இன்ஷூரன்ஸ் தொகை பெறுவது பெரிய அனுகூலமாகும். இவ்வாறு இத்தலிமுதலிய தேசங்களில் செய்து வருகிறார்கள்.

(5) இந்த இராஜதானியின் மொத்த விஸ்தீரணத்தில் 100க்கு 14. 6 பாகம் காடாயிருக்கிறது. ஆனால் இஜ்ஜில்லாவிலோ நூற்றுக்கு 1 பாகந்தான் காடிருக்கிறது. அதுவும் சியாழி, திருத்துறைபூண்டி, தஞ்சாவூர் தாலுகாக்களில்தான். ஆகையால் அடுப்புக்கு எரிதுரும்பு அகப்படாததால்தான் பயிர்களுக்கு ஜீவாதாரமாயுள்ள சாணியில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் விறட்டி தட்டப்படுகிற தென்று யூகிக்கவேண்டிய திருக்கிறது. மாட்டு சாணியை எரிக்கவேண்டா மென்று சட்டம் ஏற்படுத்துமுன் அடுப்புக்கட்டைக்குத் தக்க ஏற்பாடு செய்வதவசியம். இஜ்ஜில்லாவில் 100க்கு 6 பாகம் விவசாயம் செய்யக்கூடிய தீர்வைத் தரிசா யிருக்கிறது. இப்பேர்ப்பட்ட நிலங்களில் ஜல்தியாய் வளரக்கூடியதும் அடுப்புக்கு உபகாரப்படக் கூடியதுமான சவுக்கு தூங்காமூஞ்சி பூவரசு போன்ற கட்டைகளுக் குபயோகப் படக்கூடிய மரங்களை ஐக்ய நாணயச் சங்கங்களின் மூலமாயும் கிராம பஞ்சாயத்துகளின் மூலமாயும் உண்டாக்கி விற்றால் சகாயமாய் கட்டை அகப் படுவதுடன் சாணியும் உபகாரப் படும்.

(6) கிருஷி வேலை இல்லாத காலங்களில் கிருஷிகரையும் வேலைக்காரரையும்விட்டு ஆங்காங்கு அகப்படும் எலும்புகளைப் பொறுக்கி வரச்செய்து, நீடாமங்கலத்தி லிருக்கும் எலும்பு தூள்செய்யும் இயந்திரம் போலொத்த வைகளில் தூள் செய்யச் செய்து, சங்கங்கள் மூலமாய் சகாயமாய் விற்று உபகாரம் செய்யலாம். இதைப் போலவே திருச்சியில் கிடைக்கும் மினரல் பாஸ்பேட் என்னும் கல்லைத் தூளாக்கி சங்கங்களில் வைத்து அங்கத்தினருக்குத் தேவையான போது நியாயமான விலைக்கு விற்று உபகரிக்கலாம்.

கனவான்களே! நான் இப்பொழுதே அதிக நேரம்பேசிவிட்டேனென்று பயப் படுகிறேன். இதுவரையில் நான் சொன்ன விஷயங்களை நீங்க ளெல்லோரும் சாந்தமாயும், சந்துஷ்டியோடும் நிம்மதியாயும் கேட்டுக் கொண்டிருந்த தற்காக வந்தனம் கூறுகிறேன். அத்துடன் தஞ்சைஜில்லா மிராசுதாரர்களின் மஹா நாடு ஒன்று, ஆயிரமாக விருத்தியாகி, ஏழைக் கிருஷிகரின் தற்போதைய பரிதாபகரமான நிலைமையைத் திருத்தி அவர்கள் க்ஷேமமடையும்படி செய்ய வேண்டுமென்று ஸ்ரீ மந்நாராயணனைப் பிரார்த்திக் கிறேன்.

CATTLE REARING.

கால் நடைப் பகுதி.

கால் நடைகளை விருத்தியாக்கி வளர்க்கும் வழிகள்.

சென்றமுறை கால் நடைகளை விருத்தி செய்து வளர்க்கும் அனேக வழிகளில் மேய்ச்சல் காடுகளில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று என்று சுருக்கிச் சொன்னோம். இந்த முறை அயல் நாடுகளில் மேய்ச்சல் காடுகளை எவ்வாறு கவனித்து வருகிறார்களென்றும் அவைகளின் தற்கால நிலமை நமது தேசத்தில் எப்படி யிருக்கிறதென்றும் விசாரிப்பதுடன் அதை நாம் எவ்வாறு சீர்திருத்தம் செய்யக்கூடுமென்றும் யோசிப்போம்.

அயல் தேசங்களில் மின்சாரம் மோட்டார் ஸ்டீம் இன்ஜின் முதலிய இயந்திரங்களின் உதவியாலும் குதிரைகளைக் கட்டி உழவு செய்தும் செயற்கை எருக்களை ஜாஸ்தி உபயோகித்து கிருஷித் தொழில் செய்து கொண்டு வரும் மேல் நாட்டார் எருதுகள் பசுக்கள் முதலிய கால் நடைகளின் அபிவிருத்திக்காக ஜாஸ்தி கவனமும் அக்கரையும் இம்மேய்ச்சல் காடுகளின் விஷயத்தில் எடுத்துக்கொண்டால், இத்தேசத்தில் விவசாயிகளுக்கு உளவு, சவலை, வண்டி முதலிய வேலைகளைச் செய்யவும் நிலங்களுக்கு முக்கிய எருவாக உபயோமாகும் சாணி, பால் தயிர் மோர் நெய் முதலிய உணவுகளைக் கொடுப்பதற்குப் பிராணாதாரமாயிருக்கும் இக்கால் நடைகளைக் குறித்து நாம் எவ்வளவு தூரம் அயல் நாட்டாரை விட ஜாஸ்தி சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது எல்லாருக்கும் நன்கு விளங்கும்.

நாம் இங்கு எப்படி கம்பு சோளம் முதலிய புஞ்செய் தானியப்பயிர்களை சாகுபடிசெய்து வருகிறோமோ அம்மாதிரி ஐரோப்பிய நாடுகளில் மேய்ச்சல் காடுகளில் செய்வதுண்டு. அவைகளை காலா காலங்களில் சரிவர உழுது, எருவிட்டு, நல்ல ஜாதி புல் தினுசின் விதைகளை விதைத்து அவைகளை சரியானபடி அப்போதைக்கப் போது களை எடுத்தல் பயிரடித்தல் முதலிய வேலைகளைச் செய்து புல்லை வளரச் செய்கிறார்கள். புல் வளர்ந்த பின்னும் அவைகளில் வேறுவிதமான சத்தில்லாத மோட்டாதினுசுப் புல்கள் வளர்ந்தால் அவைகளை அப்போதைக் கப்போது அப்புறப்படுத்தியும், மேய்ச்சல் காடுகளில் புல் ரொம்பவும் இளசாயிருக்கும் போது அவைகளில் ஆடு மாடுகளை மேயவிடாமல் பந்தோபஸ்தாய் பாது காத்தும், சில சமயங்களில் வேலிகளும் உண்டாக்கி சட்டுதிட்டத்துடன் ஒரு காட்டி

இத்தனை மாடுகள் தான் இத்தனை நாட்களுக்கு மேப வேண்டுமெ ன்றொரு நிபந்தனையையும் ஏற்படுத்துகிறார்கள். ஆனால் நமது இராஜ தானியிலோ இம்மாதிரி ஒன்றும் செய்வதில்லை. கோயம்புத்தூர் ஜில் லாவில் பளையகோட்டை பட்டையக் காரரும் இன்னும் சொற்ப இடங்களில் மற்றவர்களும் கொழுக்கட்டை புல் முதலிய புல் தினுசு களை தானியப் பயிர்களைப் போல் விதைத்து உண்டாக்கி அக்காடுகளை வேலியடைத்து அவைகளில் மாடுகளை மேபவிடுகிறார்களே தவிர மற் றப்படி எல்லாரும் இம்மாதிரி கவனம் செலுத்துகிறதில்லை. நமது தேசத்தில் சரியான காலங்களில் மழைகள் பெய்யாமல் அடிக்கடி யுண்டாகும் வரட்சியினால் நமது கால் நடைகளுக்குப் போது மான மேய்ச்சல் கிடைக்க இடமில்லை. ஆகையால் அயல் தேசங் களை விட நமது நாட்டில் மேய்ச்சல் காடுகளின் அபிவிருத்தியை யும் சீர்திருத்தங்களையும் பற்றி நாம் முக்கியமாய் கவனிக்க வேண் டிய அவசியம் நேரிடுகிறது.

மேய்ச்சல் காடுகளின் அபிவிருத்தியைச் செய்ய எண்ணும் ஒவ்வொருவரும் தற்காலத்தில் அவைகளின் நிலமை எவ்வாறு இரு க்கிறதென்று யோசித்தால் மாத்திரம் சீர்திருத்தங்கள் செய்ய முடியு மேதவிர இல்லாவிட்டால் முடியாது. நமது கிராமங்கள் ஒவ்வொன் றிலும் மாடுகளை மந்தைக்குக் கொண்டு போகும் வழக்கமுண்டு. அவைகளின் ஸ்திதி எப்பேர்ப்பட்டதென்று பார்த்தால் அவைகள் பொட்டல்களாக இருக்குமே தவிர மாடு மேய அவைகளில் புல்லே கிடையாது. அப்பேர்ப்பட்ட இடங்களில் மாடுகள் ஒன்று சேர்ந்தி ருப்பதால் அவைகள் போடும் சாணியை மாடு மேய்ச்சி சுலபமாய் சே கரிக்கஹேதுவிருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. அப்பேர்ப்பட்ட இடங்களில் மாடுகள் தங்களுக்குத் தினவெடுத்தால் தங்கள் திரேகங் களைத் தேய்க்க ஒரு கல் மாத்திரம் நட்டிருக்கிற வழக்கமுண்டு. ஜாஸ் தியாய் வெயிலடிக்கும் போதாவது அல்லது மழை பெய்யும் போதா வதுநிழல் கொடுக்கச் செடிகளாவது ஒதுங்க இடமாவது கிடையாது. வீடுகளிலிருந்து காலையில் ஓட்டிக் கொண்டு போன மாடுகளுக்கு தெருக்களிலும் சந்துகளிலும் கிடக்கும் இலை சருகு முதலியவைகள் தான் தீவனமாய் ஒவ்வொரு மாடு பொருக்கித்தின்னுமே தவிர மற்றப் படி தலைகுனிந்து மேய புல் கிடையாது. சாயிந்திரத்தில் மாடுகள் வீட்டுக்குத் திரும்பும் போது அவைகள், வீட்டிலிருந்து போகும் போது இருந்த ஸ்திதியைவிட கேவலமான ஸ்திதியிலேயே வரக்

காணலாம். ஏதாவதொரு மந்தையில் தப்பி தவரி ஒன்று அல்லது இரண்டு செடிகளிருந்தால் அவைகளில் இலையென்பது இல்லாத மொட்டை செடிகளாகவே அநேகமாயிருக்கும். ஆனால் சப்பாத்துக்கள்ளி புதர்களோ வேண்டிய மட்டும் இருக்கும். அவைகளின் சந்துகளில் புல்லாவது அல்லது பூண்டுகளாவது முளைத்திருந்தால் அவைகளை மாடுகள் அதிக ஆவலாய் கஷ்டப்பட்டு இழுத்துத் தின்னும்.

இத்தகைய கிராமாந்திர பொது மந்தைகளை கவனிப்பதற்கு யாருமே கிடையாது. ஆனால் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மாடுகளை மந்தைக்கு அனுப்புவதில் மட்டும் வெகுகவனம் செலுத்துகிறார்கள். மாட்டு மந்தையின் ஸ்திதி என்ன? ஏதாவது மேய்ச்சல் இருக்கிறதா? ஏதாவது கொஞ்சநஞ்சம் மேய்ச்சலிருந்தாலும் அது ஊரிலுள்ள மாடுகள் எல்லாவற்றிற்கும் காணுமா? எந்தெந்த மாதங்களில் அந்த மந்தைகளுக்கு மாடுகளை அனுப்பலாம், எப்பொழுது அனுப்பக்கூடாது, மேய்ச்சலை அதிகப்படுத்த என்ன செய்ய வேண்டும். நிழல் கொடுக்கக்கூடிய செடிகள் இருக்கின்றனவா வென்ற இவைகளைப் போலொத்த விஷயங்களைப் பற்றி மாடுகளின் சொந்தக்காரர் ஒருவராவது கொஞ்சங்கூட யோசனை செய்வது கிடையாது. காலா காலங்களில் மழைகள் பெய்து புல்பூண்டுகள் சற்று தலை காட்டும் வருஷங்களிலும் மேல்சொன்ன விஷயங்களில் கவனம் சற்றும் செலுத்தாமல் புல்பூண்டு தலைகாட்டின உடனே மாடுகளை கும்பலாய் அவ்விடத்துக்கு ஓட்டுவது வழக்கம் இப்படிச்செய்வதினால் முளைத்துவரும் இழம்புல் எல்லாம் மிதிபட்டு செத்துப் போகிறது, முறட்டு தினுசு புல்பூண்டுகள் மாடுகளால் மிதிபட்டபோதிலும் சற்றுதப்பி தடுமாரி திரும்பவும் தலை எடுக்க சக்தியுண்டு. ஆனால் சற்று நயமான தினுசு புல்லுகளோ உடனே மிதிபட்டு அடியோடு கெட்டுப் போகிறது. இந்த முராட்டு புல்களும் வளரவளர அதை மாடுகள் மேய்ந்து விடும் காரணத்தால் அவைகள் பூத்து விதைகள் முற்றி அந்த இடத்தில் புல் ஜாஸ்தி விருத்தியாக இடமில்லாமலும் போகிறது. இதுவுமன்றி மழை காலங்களிலும் மந்தை அல்லது மேய்ச்சல் காட்டின் தரை ஈரமாயிருக்கும் போதும் கூட அவைகளில் மாடுகளைக் கொண்டு போய் மேயவிடுவதால் மாடுகளின் மிதி யளிவினால் தரை பாரையைப் போல் கெட்டியாவதுடன் சற்றுஈரம் ஜாஸ்தியாயிருக்கு மிடங்களில் மாட்டு குழம்பு

களினுலுண்டாகும் பள்ளங்களில் மழைத்தண்ணீர் கட்டி அதில் மரு படியும் மாடுகள் மிதிக்கும்போது அவ்விடம்சேராகி அங்கிருக்கும் புல்பூண்டுகள் அழுகிநாசமடைகின்றன, இப்படி பலகாரணங்களால் நாளாவட்டத்தில் முளைத்திருந்த புல் எல்லாம் நசித்துப்போய் மேய்ச்சல் பூமிகள் கட்டாந்தரையாயும் பொட்டலாயும் மாறிப் போகிறது.

மேய்ச்சல் பூமிகள் கெட்டுப் போவதற்குக் காரணங்கள் மேல் குறிப்பிட்டவை களாயினும், முக்கியமான காரணங்கள் இரண்டொன்று சொல்லலாம்: முதலாவது, எத்தனை மாடுகளுக்கு ஒரு காட்டில் மேய்ச்சல்காணுமே அதைவிட ஜாஸ்தி மாடுகளை அக்காட்டிற்கு அனுப்புவது. இரண்டாவது, வருஷம் பூராவும் இடைவிடாமல் மாடுகளை ஒரே மந்தையில் அல்லது மேய்ச்சல் காட்டில் மேய்ப்பது. இப்படிச் செய்வதினல் புல் விருத்தியாகாமல் நாளுக்குநாள் குறைந்து கட்டாந்தரை யாவதுடன் மாடுகளுக்குப் போதுமான மேய்ச்சலில்லாமலும் போகிறது. மேற் கூறியகுறைகளில்லாமல்கால் நடைகளுக்கு பிரயோஜனப் படும்படி மேய்ச்சல் பூமிகளை விருத்தி செய்துபாது கார்த்து வரவேண்டுமென்றால் இதனடியில் சொல்லும் விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்:—

(1) மேய்ச்சல் காடுகளைச் சுற்றி வேலி போட்டு அல்லது வேலியாக உபயோகப்படக் கூடிய விதைகளைப் போட்டு வேலியுண்டாக்க வேண்டும். கொருக்காபுள்ளி, நாகதாளி, சதுரக்கள்ளி, கொடிக்கள்ளி முள்ளுகிழுவை, முதலியவைகள் நல்ல வேலியாகும்.

(2) வேலி ஓரங்களிலும், மற்ற மேய்ச்சல் காட்டி னுள்ளும் அங்கங்கே நிழல் கொடுக்கக் கூடியதும், வெயில் காலங்களில் அவைகளின் காய்கள் இலைகள் முதலியவை கால் நடைகளுக்கு தீவனமாய் உபயோகிக்க கூடிய விருக்ஷங்களை அங்கங்கே நட்டுப் பயிராக்க வேண்டும். பூவரசு ஜல்தி வளருவதுடன் நிழல் கொடுக்கும். வேல மரம், வெள் வேலமரம் தூங்கா மூஞ்சி அல்லது சீமை வாகைமரம் இவை களின் இலைகளும் காய்களும் தீவனமாகவும் உபயோகப்படும்; நிழலும் கொடுக்கும்.

(2) மேய்ச்சல் பூமிகளுக்கு அருகேயாவது அல்லது மேய்ச்சல் பூமிக்குள்ளாவது மாடுகள் தண்ணீர் குடிக்கக் கூடிய வசதிகளுள்ள சிறு குட்டைகளாவது குளங்களாவது அமைக்கப் படவேண்டும். அவைகளில் மழை காலத்தில் மழையின் தண்ணீர் கட்டி நின்று

மாடுகளுக்கு உபயோகப் படுவதுடன் அவைகளைச் சுற்றிலுஞ் செடிகளை நட்டு விருத்தி செய்தால் வெயில் காலங்களில் நிழலாக உபயோகப் படுவதோடு அவைகளின் காய்களும் இலைகளும் மாடு களுக்குத் தீனியாகவும் உபயோகமாகும்.

(4) மேய்ச்சல் பூமி விஸ்தாரமாயுள்ளதா யிருந்தால் அதை அனேக பங்குகளாகப் பிரித்து ஊடேவேலிகள் அமைத்து ஒரு துண்டிலிருந்து மற்றொரு துண்டுக்கு கால் நடைகள் போகக் கூடாத படிசெய்ய வேண்டும்.

(5) அந்தந்தப் பிராந்தியங்களின் சீதஉஷ்ண பேதங்களுக்கும் மழையளவுக்கும் தக்கபடி மேய்ச்சல் தரைகளை சரியாய் பருவம் செய்து அதில் புல் தினுசு விதைகளை விதைக்க வேண்டும். அத்துடன் கலப்புப் பயிராய் லேசாய் பருத்தி கம்பு முதலியவைகளை விதைத்தால் புல் முற்றும் வரைப் பயிர்களிருந்தால் மாடுகளை அவ்வி டங்களுக்குப் போக வொட்டாமல் தடுக்க இடம் கொடுக்கும். களிப் பில்லாத நிலங்களுக்கு, கொழுக் கட்டை புல்போன்ற தினுசுகள் சிலாக்கியம். சற்று களிமண் சார்பாயுள்ள நிலங்களுக்கு, குந்தூரு, செங்காரி அருகுபோன்ற புல்தினுசுகள் ஏற்கும்.

(6) இப்படி புல் விதைத்து விருத்தி செய்த இடங்களில் புல் நன்றாய் முளைத்து பயிரானபின் அந்த நிலத்தை கட்டைக் கலப் பை கொண்டாவது விதைக்கலப்பை கொண்டாவது லேசாய் மே லேயே போகும்படி கட்டி, ஒன்று அல்லது இரண்டுதரம் பபிரடித்து விட வேண்டும்.

(7) புல் முற்றியபின் முதல் வருஷத்தில் சற்று லேசாய் ஒரு பக்கத்திலிருந்து மாடுகளை மேபவிட்டு அப்பால் காட்டை கட்டுப்பாடு செய்ய வேண்டும். கண்டபடி மாடுகளை ஓட்டுவதால் குழிகள் விழு ந்து அக்குளிகளில் புல் விருத்தியாக மாட்டாது,

(8) கோடை காலத்திலும் மழைகாலத்திலும், மேய்ச்சல் காடு களில் மாடுகளை மேயவிடக்கூடாது.

(9) மழை பெய்து புல் தளிர்க்க ஆரம்பித்தவுடனே மாடுகளை மேயவிடக் கூடாது. புல் துளிர்க்க ஆரம்பித்த 4 அல்லது 5 வார ங்கள் கழித்தபின் தான் மாடுகளை மேய்க்கக் காட்டில் விடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் மாடுகள் இளம் புல்லை மேய்வதனால் வய ற்றோட்டம் போன்ற நோய் உண்டாவதுடன் புல்லும் கெட்டுப் போகும்.

(10) ஒவ்வொரு வருஷமும் மழைக்குத் தக்கபடி எவ்வளவு புல் வளர்ந்திருக்கிற தென்பதை யோசித்து அதற்கு தகுந்தவாறு கணக்கிட்டு மாடுகளை மேய்ச்சலுக்கு அக்காட்டுக்கு அனுப்பவேண்டும். ஒரு காட்டிலுள்ள புல் அளவுக்கு மிஞ்சி அதிக மாடுகளை மேயவிடுவதனால் அவ்வளவு மாடுகளுக்கும் போதுமான மேய்ச்சல் கிடைக்காதது மன்றி அக்காட்டில் அப்பால் புல் வளரும் குணமும் குன்றிவிடும்.

(11) மேய்ச்சல் காடுகளில் தண்ணீர்பாயவாவது இறைக்கவாவது வசதி களிருக்கும் பக்ஷத்தில், சோளம், கம்பு, கினிபா புல் போன்ற அனேக தினுசு தீவனப் பயிர்களைப் பயிர் செய்து மேய்ச்சல் குறைந்த வெயில் காலங்களில் அவைகளை அறுத்து சில மாடுகளைப் போஷிக்கலாம்.

(12) மேய்ச்சல் பூமிகளில் முளைத்திருக்கும் பிரயோஜனமில்லாத குத்துச் செடிகளையும் பூண்டுகளையும் வேரோடு அப்புரப் படுத்தி அப்பள்ளங்களையும் சரியானபடி மூடவேண்டும்.

(13) முதல் முதல் புல் விருத்தி செய்யும் போது மாடுகளை அக்காட்டில் மேய்க்க விடாமல் புல் பூத்து விதை பிடித்து அவ் விதைகள் அந்நிலத்தில் சிதரும் வரை மாடுகளை அந்நிலத்தில் விடாமல் பாதுகாத்து விதைகள் கீழே சிந்த ஆரம்பித்த உடன் அக்காட்டுக்கு ஆட்டுமந்தை லேசாய் கட்டவேண்டும். ஆடுகள் விதை முற்றின புல்லை மேய்ந்து அவ்விதைகள் புழுக்கைகளுடன் (ஆட்டுச்சாணியுடன்) நிலத்தில் விழுந்து மறு வருஷம் ஜாஸ்தி புல் முளைக்கும். ஆடுகள் போடும் புழுக்கை அதன் திரேகத்திலிருந்து உதிரும் ரோமம் ஆட்டு மூத்திரம் முதலியன நல்ல எருவு மாகும். இப்படி பருவம் செய்த இடத்தில் இரண்டாம் வருஷம் புல் நன்றாய் அடர்ந்து உயர்ந்து வளர்ந்து புல்லில்லாத காட்டில் புல் இரண்டாவது வருஷக்கடைசியில் நன்றாய் வளர்ந்திருக்கும். இரண்டாவது வருஷத்திலும் புல்லை சற்று நிதானமாய் மேயும்படி ஏற்பாடு செய்தால் அவ்வருஷத்திலும் புல் புஷ்பித்து விதை பிடித்து முற்றி சிதறி மூன்றாவது வருஷம் மாடுகள் நன்றாய் மேயப் புல்லிருக்கும். இப்படிச் செய்த மேய்ச்சல் காடுகளை 3 பாகங்களாகப்பிரித்து மேல் சொன்ன பிரகாரம் கையாடி வந்தால் மாடுகளுக்கு நல்ல மேய்ச்சல் கிடைப்பதுடன் மேய்ச்சல் காடுகளும் நாளுக்கு நாள் அபிவிருத்தியமான ஸ்திதிக்கு வந்து விடும்.

மேல் சொன்ன முறைகளை யனுசரித்து திருஷ்டாந்த பூர்வமாய் அனேக இடங்களில் பொட்டலாயிருந்த மேய்ச்சல் காடுகளை 3 வருஷங்களுக்குள் விருத்தி செய்திருக்கிறதை நாம் பார்த்திருக்கிறோம்; கோவில்பட்டி சர்க்கார் பண்ணை, ஹகிரி சர்க்கார் பண்ணை கோயம்புத்தூர் சர்க்கார் பண்ணை முதலிய இடங்களிலும் இவ்வாறு கொஞ்சவருஷங்களுக்குள் புல் முளைத்திராத இடங்களில் நல்லபுல் வளர்த்திருக்கிறார்கள். "அடைத்தவன் காட்டைப்பார்; மேய்த்தவன் மாட்டைப்பார்" என்றபழமொழி இதற்கும் பொருந்தும்.

கிராமங்களில் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து யோசித்து எல்லாருடைய சம்மதத்தின் பேரில் பொதுவிலிருந்து இச்செலவுகளைச் செய்து அதற்குப் பிடிக்கும் செலவையும் பராமரிப்பையும் கவனித்து மேயவிடும் மாடுகள் ஒவ்வொன்றுக்கு வருஷத்திற்கு இவ்வளவு கொடுப்பதென்று தீர்மானித்து நடத்தினால் இவ்வேலை செய்வது அசாத்யமாகாது. கிராமந்திரங்களில் கட்டுப்பாடு உண்டானால் தான் க்ஷேமமுண்டாகும். முற்காலத்தில் பெரியவர்கள் சொற்கேட்டு நடந்து கட்டுப் பாடாயிருந்த காலத்தில் நடந்தேறிய நன்மைகளையும் தற்காலத்தில் கட்டுப்பாடின்றி தான் தோன்றிசாமிகளாய்ப் பெரியவர்கள் வார்த்தைகளைக் கேட்காமல் நடந்ததால் அடைந்த க்ஷீணிதத்தையும் உத்தேசித்து ஒற்றுமையாய்க் காரியாதிகள் நடத்த வேண்டுமென்பது நமது கோறிக்கை.

NEWS AND NOTES.

குறிப்புகள்.

சென்ற வருஷத்தில் உலகம் எங்குமுள்ள தங்கச்சுரங்கங்களில் வெட்டியெடுத்த தங்கத்தின் விலையைவிட அமெரிக்காவில் மாத்திரம் கோழி முட்டை விற்றுச் சம்பாதித்த பணம் அதிகமாம்.

* * *

சென்ற ஆண்டு நவம்பர் முதல் இந்த ஆண்டு நவம்பர் வரை கானடா தேசத்தில் ஒருகோழி 348-முட்டைகள் இட்டதாம். இதுதான் பூலோகத்தில் அதிக முட்டையிட்ட கோழியாம்.

* * *

அமெரிக்க விவசாய நிபுணரும், கவிராயர் ரவிந்திர நாதரின் சாந்தி நிகேதன ஆசிரமத்தில் ஸ்ரீ நிகேதனம் என்ற விவசாயப் பகுதியைச் சீர்ப்படுத்தத் துணை புரிந்தவருமான யல். கே. எமிர்ஸ்டு என்பவர் அதற்காக 45000 ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்.

GUINEA GRASS.

கினியா புல்

விவசாய டிபார்டுமெண்டார் கால் நடைத் தீவனத்துக் கென்று அநேக வகைப் புல் தினுசுகளை 1869ம் வருஷ அயல் தேசங்களிலிருந்து கொண்டு வந்து பயிரிட்டு பரீக்ஷை செய்ததில் அவை யெல்லாம் கினியாப் புல்லைப் போல அவ்வளவு உபயோகமுள்ளவைகளல்ல வென்றும், கினியாப் புல்லே தீவனத்துக்கு மிகவும் உபயோகமுள்ள தென்றும் கண்டு பிடிக்கப்பட்டது. அயல் தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாயினும் கினியாப் புல்லானது இத்தேசத்து கால நிலைக்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும், ஒத்து வளர்ந்து நிலை பெற்றிருக்கிறது. இது சில மாதங்களுக்குள் பூத்து, காய்த்து, மடிந்து போகிற வருஷப் பயிர்களைப் போலல்லாமல் சதா நிலை பெற்று அழியாதிருக்கும் ஸ்திரமான பயிர்களில் ஒன்று. இது ஒரு தரம் ஓரிடத்தில் வேரூன்றி நிலை பெற்று விட்டால் அது அவ்விடத்தில் என்றைக்கும் அழியாத பயிரா யிருக்கும். இது இந்தப் பயிரிலுள்ள முக்கிய விசேஷாம்சங்களில் ஒன்று. சற்று ஈரமுள்ள இடங்களில் இப்பயிர் வெகு செழிப்பாய் வளரும். இந்தப் புல் குத்து குத்தாக வளர்ந்து சுமார் இரண்டு அடி நீளமுள்ள வாருத் தாள்கள் போன்ற இலைகளுடன் சுமார் இரண்டு மூன்றடி உயரம் வளரும். நெல் பயிரின் வேர்களைப் போல் இதன் வேர்கள் ஆணிவேரின்றி கொத்துங் கொத்தாய் நார் வேர்களுடையதாயிருக்கும். அவைகள் பூமிக்குள் ஆறு முதல் ஒன்பது அங்குல ஆழத்திற்கு சென்றிருக்கும்.

இந்தப் பயிரில் ஒரு தனி முதல் நட்டால் நாளாவிர்த்தியில் பக்கக் கிளைகள் வெடித்துப் பெரிதாகத் தூர்கட்டி நூறு, நூற்றிருபது புல் இலைகளுடன் செழித்தோங்கி வளர்ந்து பார்ப்பதற்கு வெகு அழகாக விளங்கும். சாதாரணமாக இந்தப் புல் அற்பிசி, கார்த்திகை மாதங்களில் கதிர் வாங்கி புஷ்பிக்கிறது. அப்போது அது ஐந்து அல்லது ஆறடி உயரத்துக்கு நீண்டு வளர்ந்து கதிர் விரிந்து நிற்கும். கதிர்களிலுள்ள விதைகள் மணி பிடிக்காத சிறு கம்பம்புல் தானியத்தைப் போலிருக்கும்

இந்தப் பயிருக்கேற்ற நிலம்:--களரில்லாத எவ்வகை நிலத்திலும் இந்தப் புல் உண்டாகிறது. மணல்கால் நிலங்களிலும் சரளை நிலங்களிலும் பயிரிட்டால் அவைகளுக்கு அடிக்கடி தண்

ணீர் பாய்ச்சவேண்டும். மிகவும் களிக்காலாயுள்ள நிலங்களில் இந்தப் புல் உண்டாவதும் வேர்விடுவதும் சற்றுப் பிரயாசமாயிருக்கும். மண்ணும் மணலும் கலந்த பசளை மண் பூமிகளிலும் குருமண் நிலங்களிலும் இந்தப் புல் வெகுவாய் செழித்து வளர்கின்றது. மழை காலத்தில் வெகு நாட்களுக்குத் தண்ணீர் கட்டி நிற்காத நிலங்களைத் தெரிந்து எடுக்க வேண்டும். ஆற்றுப் படுகை நிலங்களில் இது விசேஷமாய் உண்டாகிறது. ஒரு வருஷம் நன்ருய் மக்கிய குதிரை லத்தி எருவும், மாட்டு எருவும் இந்தப் பயிருக்கு முக்கியமான எருவாகும். எவ்வளவுக்கு அதிகமாய் எருவிடுகிருேமோ அவ்வளவுக்கதிகமாய் அது செழித்துக் கிளைத்து வளர்ந்து விசேஷமான புல்லை ஏராளமாய்த் தருகிறது.

விதை நாற்றுப் பாவும் முறை:—நிலத்தை ஒன்பது அங்குல ஆழத்திற்கு நன்ருய்க் கொத்தி புழுதியாக்கி கல் கட்டிகளைப் பொறுக்கி எறிந்து சிறு பாத்திகளாகச் செய்து எருவிட்டு மறுபடியும் கொத்திக் கலந்து சமதளப் படுத்தி கை விரலினுலாவது, சிறுகுச்சி யினுலாவது மூன்றங்குல இடைவிட்டு அரை அங்குல ஆழமுள்ள கோடுகளைக் கீறி அவைகளில் விதைகளை இலேசாய்த் தூவி இருபுறத்திலு முள்ள மண்ணை விதைகள் மறையும்படி கால் அங்குல உயரத்திற்கு மூடி கையினுலாவது (புஷ்பச் செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும்) பூவாளியினுலாவது மூன்றங்குல ஆழத்திற்கு ஈரம் சுவரும் படி தண்ணீர் தெளித்து பிரதிதினமும் மாலையில் இவ்விதமாகவே நீர் தெளித்து வந்தால் சில நாட்களில் விதைகள் முளைத்து வளரும். இரண்டு மாத காலத்தில் வாகுப்பயிர் கிளைப்பது போலப் பக்கத் தாள்கள் உண்டாகி வளரும். அந்த சமயத்தில் புல்நாற்றை வேர் சிதையாமல் வெட்டி எடுத்து ஒவ்வொரு தனி முதலாக அயலிடங்களில் நடலாம்.

நடும் முறை:— நிலத்தை மூன்று தடவைக்குக் குறையாமல் ஆழமாய் உழவேண்டும். அப்படி உழுதபின்பு ஏக்கரா ஒன்றுக்கு பன்னிரண்டு வண்டி எருவுக்குக் குறையாமல் போட்டு மறுபடியும் நன்ருய் உழுது புழுதியாக்க வேண்டும். அவ்விடங்களில் மழை பெய்யும் காலத்தை தெரிந்து கொண்டு வைகாசி, ஆனியில் பெய்யும் சாரல் மழையிலோ அற்பிசி, கார்த்திகை மாதங்களில் பெய்யும் கால மழையிலோ இந்தப்புல்லை நடுவது உசிதமாகும். மழை சரமாரியாய்ப் பெய்யாமல் ஆகாய மண்டலம் சற்று மேகமும், மந்தாரமுமாயிருந்து

லேசான மழை தூற்றல் இருந்தால் அதுவே கினியாபுல் நடுவதற்கு மிகவும் ஏற்ற காலம். அப்போது நிலத்திலுண்டாகும் ஈரமே அந்தப்புல் வேர்விட்டு நிலை பெறப் போதுமானதாயிருக்கும். அப்படிப்பட்ட தருணத்தில் நடப்பட்ட முதல் களில் ஒன்று கூட கெடாமல் எல்லாம் துளிர்த்து வளரத் தொடங்கும். இந்தப் புல்லை இரண்டடிக் கொன்றாக வரிசை வரிசையாய் நடவேண்டும். நடுவதில் ஒன்றுக் கொன்று இருபக்கத்திலும் (நெருக்கிலும் குறுக்கிலும்) நேர் வரிசைகளாயிருக்கும் விதமாய் நடவேண்டும். டமுந்தூர்களை வெட்டி நட்ட பயிரைப் பார்க்கிலும் விலத விதைத்து உண்டாக்கிய நாற்று நடுவதில் பயிர் விசேஷ வளர்ச்சி யடைந்து புல் அதிகமாகக் கிடைக்கிறது.

புல் அறுக்கும் விதம்:— நட்ட இரண்டு மாத காலத்தில் மேற் சொன்ன விதமாகப் பயிர் கிளைத்து தூர் கட்டி, பத்துப் பதினைந்து புல் இலைகளுடன் வளர்ந்து நிற்கும். அப்போது பூமியிலிருந்து இரண்டங்குலத்தாள் விட்டுப் புல்லை அறுக்க வேண்டும. அப்படிச் செய்யாமல், ஆறு அல்லது எட்டங்குலத் தாள் விட்டு அறுத்தால் அந்தத் தாளிலிருந்து கிளைத்து வரும் மறு தாள்களை அறுக்கும் போது முன்விட்ட அறுதாள்கள் மிகவும் இடஞ்சலை உண்டு பண்ணும். மேலும், நமக்கு உபயோகப் படக்கூடிய புல் முழுவதும் கிடைக்காமல் நஷ்டமடையவும் ஏதுவாகும், இப்படி அறுத்தபின் இரண்டு மாதம் கழித்து மறுதாள்கள் அறுக்கக் கூடியதாகும். அப்பொழுது ஒவ்வொரு தூரிலும், நாற்பது, ஐம்பது, மறுதாள்கள் நெருங்கிக் கிளைத்திருக்கும இவ்விதமாக ஒன்று அல்லது இரண்டுமாதத்துக் கொரு முறை புல்லை அறுத்துக் கொண்டேயிருக்கலாம்.

ஒரு வருஷக்காலத்தில், அறுதாள்கள் மிகவும் பெரிதாய் அதில் நின்று கிளைக்கும் மறு தாள்கள் வரவரச் சிறிதாய் செழிப்புக் குறைந்து தோன்றும். அப்போது, அதாவது, மாரி காலத்துக்குச் சற்று முன்னதாக, இப்புல் தாளகளுக்கு இடையிலுள்ள நிலத்தை, நாட்டுக் கலப்பை கொண்டு, பயிரடிப்பது போல் உழுது புழுதியாக்கி விடவேண்டும். மழை பெய்தவுடன் தாள்களை அறுக்காமல் முற்றிலும் வளரவிட வேண்டும்

முன் சொன்னபடி, கார்த்திகை மாதத்தில் புல் கதிர்விட்டு பூத்து விதை பிடிக்கும். விதை முற்றும் வரை புல்லை அறுக்

காமல் விட்டு வைத்தால் அவ்விதைகள் சுற்றிலுமிள்ள நிலத்தில் சுலபமாகவே விழுந்து அக்காலத்தில் பெய்யும் மழையில் முளைத்துப் பயிராகும். இப்படி சுற்றிலும் இளம் பயிருண்டான உடனே பழந்தாள்களை வேருடன் வெட்டி எடுத்து நமக்கு இஷ்டமான இடங்களில் முன் விவரித்த விதமாக நாற்று நட்டு விடலாம். இவ்விதமாக இப்புல் பயிராகும் விஸ்தீரணத்தை வேண்டியபடி விருத்தி செய்து கொள்ளலாம்.

பழந்தாள்களை வேருடன் வெட்டி எடுத்து நடுவதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு, புல் அறுப்பான சில தினங்களுக்குப்பின் அதாவது, அந்தத் தாள்களிலிருந்து மறு தாள்கள் ஆறு அங்குல நீளத்திற்கு வளர்ந்த பின்னரே அத்தூர்களை வெட்டி எடுக்க வேண்டும். புல் அறுப்பானவுடனே தூர்களை வெட்டி எடுத்து நட்டால் அவைகளில் அநேக முதல்கள், முளைக்காமல் பட்டுப் போகின்றன. பச்சைப் புல் இதழ்களில்லாத கட்டைத்தூர்களை மட்டும் நடுவது பிரயோஜனமற்றதாகிறது.

நீர்ப் பாய்ச்சல்:—கோடை காலங்களில் பாத்திகளில் நடப்பட்ட இப்பயிருந்து இரண்டு வாரத்துக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சுவது உத்தமம். அப்படிச் செய்தால் அதினின்று புல் அதிகமாய் கிடைக்கும். ஆனால் தண்ணீர் பாய்ச்சாவிடில் அந்தப் பயிர் அழிந்து போகுமென்று ஒருவரும் பயப்பட வேண்டியதில்லை. இறவைத் தண்ணீர் அகப்படாத இடங்களில் கோடைகாலத்தில் இப்பயிர் உலர்ந்து சருகாய்ப் போனாலும் சில நாள் கழித்து ஒரு மழைபெய்யும் போது அது மறுபடியும் தளிர் விட்டு ஓங்கிவளரத் தொடங்கி விடும். இதனால் அருங்கோடையிலுங் கூட இந்தப்புல்லின் வேர்கள் சாவதில்லை என்பது வெளியாகின்றது. ஒரு வருஷத்தில் இந்தப் பயிரிலிருந்து பன்னிரண்டு தரம் புல் அறுக்கலாம். ஏக்கர் ஒன்றுக்கு ஒரு வருஷத்துக்கு இருபதினாயிரம் அல்லது முப்பதினாயிரம் ராத்தல் எடையுள்ள புல் கிடைக்கும். அதிகமாய் எருவிட்டுப் பயிருழவு செய்து தண்ணீர் பாய்ச்சினால் நாற்பதினாயிரம் ராத்தல் புல் கிடைக்கலாம்.

பயிரிடும் செலவு ஏக்கர் ஒன்றுக்கு.

மூன்றுழவு	3	0	0
பன்னிரண்டு வண்டி எரு	12	0	0
நடுகைக் கூலி	2	0	0
பயிரடிப்பு	1	0	0
நீர் பாய்சல் (12 முறை)	18	0	0
அறுப்புக் கூலி	9	0	0
ஆக ரூ.	45	0	0

ஒரு ஏக்கராவுக்குக் கிடைக்கும்
புல்லின் கிரயம்

1 ரூபாய்க்கு 200. ராத்தல் வீதம்

20000 ராத்தலுக்கு	ரூ.	100	0	0
ஏக்கரா ஒன்றுக்கு லாபம்	ரூ.	55	0	0

இது சாதாரணமாம் எல்லா விடங்களிலும் கிடைக்கக்கூடிய லாபம். பட்டணங்களுக்கு சமீபத்தில் இந்தப் புல்லை உண்டாக்கினல் அங்குப் புல் விலை தற்காலத்தில் மிகவும் அதிகப் பட்டிருக்கும் காரணத்தால் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ரூ. 150. லாபம் கிடைக்கலாம்.

பொதுக்குறிப்பு.

இந்தப் புல்லை மாந்தோப்பின் அடி நிலங்களிலும் தென்னந்தோப்புகளிலும் பயிரிடலாம். நிழலினல் இப்புல் சேதமடைவதில்லை.

மாடு மேய்ச் சலுக்காக பந்தோபஸ்து செய்யப் பட்டிருக்கும் மேய்ச்சல் காடுகளில், மழை காலங்களில் இவ் விதைகளை ஆங்காங்கு தூவி, விதை மறையும் படியாய் படலடித்து விட்டால் இந்தப்புல் முளைத்துப் பயிராகிவிடும். சிலமாதங்கள் சென்று அப்பயிரில் கால் நடைகளை மேய விடலாம். இந்தப் புல் குதிரைகளுக்கும் உபயோகமுள்ள தீனியாகும். ஆடுகள் மேய்வதற்கும் மிகவும் உபயோகமுள்ளது.

வருஷா வருஷம் தானியப் பயிர்கள், தயில வித்துகள், சாகுபடிசெய்யப் படும் நிலங்களில் இதை இடையிடையே ஒவ்வொரு வருஷத்தில் மாற்றுப் பயிராகச் சாகுபடி செய்யலாம். அப்படிச் செய்வதினல் அனேக குணங்க ளுண்டு. பயிர் களுக்கு வேண்டிய

ஒரே விதமான பயிருணவு குறைவுபடாமல் காக்கலாம். வருஷா வருஷம் ஒரே இனுசுப் பயிரை சாகுபடி செய்யும்போது அவைகளுக்குக் கெடுதி உண்டாக்கும் புழுப் பூச்சிகளும், நோய் நொடிகளும், அந்நிலத்தில் அதிகரித்து நிலைவர மடைகின்றன.

ஒரு வருஷத்தில் அந் நிலத்தில் இப்புல்லைப் பயிரிடுவதால் அந் நிலத்தில் அமையப் பெற்ற பூச்சி, புழு, நோய், நொடி, முதலியவற்றின் கருவழிந்து போகக் காரணமாகும். மேலும், இப்புல்லின் தூர்கள் நெருங்கி வளர்ந்து நிலத்தை மூடிக்கொள்வதால் அந் நிலத்தில் இயற்கையாய் உண்டாகும் களைப்பூண்டுகள் தலை எடுக்காமல் அழிந்து கருவற்றுப் போவதற்கும் காரணமாகும்.

பட்டணங்களிலுள்ள வீட்டுக்கொல்லைகளில் சாக்கடைத் தண்ணீர் கட்டி தெருக்களில் ஓடி ஆபாசப்படுத்துவது எல்லாருக்கும் தெரியும். இப்படி அசௌக்கியத்தை உண்டாக்கும் சாக்கடைத் தண்ணீரை உபயோகப் படுத்தி அசங்கியம் ஏற்படாமல் சௌக்கியத்தை விருத்திசெய்ய இப்புல்லைப் பயிரிடலாம். வீட்டுக்கொல்லைகளில் சாக்கடை ஓரங்களில் பத்தடி நீளமுள்ள நான்கு வரிசைகளாக இப்புல்லை நட்டுவிட்டால் இரண்டு நாளைக் கொருமுறை சாக்கடைத் தண்ணீரை ஒரு வரிசைக்குப் பாய்ச்சி வரவேண்டும். இவ்விதமாக ஒவ்வொரு வரிசைக்கும் மாறி மாறித் தண்ணீர் பாய்வதால் சாக்கடைத் தண்ணீர்கட்டி நிற்காமல் காய்ந்து அதில் துர்நாற்றம் சற்றும் இல்லாமல் போகிறது. இப்படி உண்டாக்கிய பயிரில் ஒரு நாளுக்கு ஒரு தூராக அறுத்துப் பால் பசுக்களுக்கு உபயோகிக்கலாம். இதனுல் சாக்கடையின் துர்நாற்றம் எடுபட்டுப் போவது மன்றி அதனுல் உண்டாகும் அசௌக்கியம் கொசுக்கடி உபாதி முதலிய தீபகுணங்களும் குறைவு படுகின்றன.

இந்தப்புல்லின் விசேஷம்

பிரயோஜனம்:— கால் நடைகளுக்கும், கறவைப் பசுகளுக்கும் குதிரைகளுக்கும் ஆடுகளுக்கும் இது வெகு சிலாக்கியமான ஆகார வஸ்து. ஒவ்வொரு நாளும் இந்தப் புல்லைப் போட்டு வந்தால் கால் நடைகள் மிகவும் கொழுப் படைந்து வளரும். குறைந்த நிலங்கள் வைத்திருக்கும் சிறு கிருஷிகரும் கூட தாங்கள் கிணற்றுத் தண்ணீர் பாயும் கால்களின் இருகரைகளின் வெளிப் பக்கத்தில் இப்புல்லை பயிராக்கலாம். அதிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் பச்சைப்புல் அவர்கள் கால் நடைளுக்குப் போதுமான தாயிருக்கும்.

மழை காலத்தில் கால் நடைகளுக்குப் பொதுவாய் நல்ல மேய்ச்சல் எங்கும் கிடைக்கக் கூடியது. அந்தக் காலத்தில் விசேஷமாய் வளரும் இந்தப் புல்லை அது கதிர் வாங்கிப் புஷ்பிக்கும் போது அறுத்து உலர்த்தி படப்பாக அடைந்து வைத்துக் கொண்டு தீவனத் தட்டாகும் காலங்களில் சோள நாற்றுப் போடுவது போலக் கால் நடைகளுக்கு இதை உபயோகிக்கலாம்.

ஓரிடத்தில் இந்தப் புல் வேர் விட்டு வளர்ந்து விட்டால், அது பின் அவ்விடத்தில் எக்காலத்துக்கும் அழியாமல் நிலை பெற்று நிற்கும் விசேஷ சக்தியுள்ளது. மேலும் ஓரிடத்தில் முதல் முதல் ஒரு செண்டு விஸ்தீரணத்தில் முன் சொன்ன பிரகாரம் இப்புல்லைப் பயிரிட்டால் ஆறுமாதக் காலத்தில் அந்தத் தூர்களை வெட்டி யெடுத்து 10 செண்டு விஸ்தீரணத்தில் நடலாம். ஒருவருஷக்காலத்தில் இரண்டேக்ரா விஸ்தீரணம் நடக் கூடும். மறு வருஷத்தில் 20 ஏக்கரா நட்டு முடிக்கலாம். இவ்விதமாக வருஷா வருஷம் இதன் விஸ்தீரணத்தை அதிகப் படுத்திக் கொள்ளக் கூடும். ஒரு கிராமத்தில் வேண்டிய விஸ்தீரணம் முழுவதும் நட்டு முடிந்து போனால், மிகுந்த தாள்களை அயல் கிராமங்களுக்குக் கொடுத்து அங்கே நடும்படி ஏற்பாடு செய்யலாம்.

நமது கால் நடைகளைக் காப்பாற்ற வந்த இந்த ஆச்சரியமான புல்லை நமது கிருஷிகர் பரீட்சார்த்தமாக ஒருசிறு பாத்தியில் பயிரிட்டுப் பார்ப்பார்களானால் அதை எப்போதும் கைவிட மாட்டார்கள் என்பது நிச்சயம். கிணற்றோரங்களில் சிறிதும் தண்ணீர் உபயோகப் படும் விதமாக அங்கே நாலைந்து தூர்கள் நட்டு வைத்தாலும் போதுமானது.

குறிப்புகள்

அமெரிக்காவில் உள்ள அட்டா என்ற ஒரு வகை எறும்புகள் விதை விதைத்துப் பயிர் செய்து பிழைக்கின்றனவாம்.

* * *

மெக்ஸிகோ தேசத்தில் வளரும் ''மகுவி'' என்னும் மரத்தின் பட்டையிலிருந்து உண்டாக்கப்படும் நூல் பருத்தி நூலைவிட மூன்று மடங்கு கெட்டியானதாம்.

* * *

ஜெர்மனியின் தலை நகரான பெர்லினில் டாக்டர் சார்ல் மூல்லர் என்பவர் மெல்லிய கண்ணாடி போன்று தெளிவான இரும்பை உற்பத்தி செய்திருக்கிறாராம்.

PREVENTION OF INSECT PEST BY CO-OPERATION.

பூச்சிகளினுல் உண்டாகும் பெருவாரிநோயை கூட்டுறவால் தடுத்தல்.

தற்காலத்தில் எங்கு பார்த்தாலும் கூட்டுறவு என்ற கூச்குரல் கேட்கிறோம். எந்த விஷயத்தைப் பற்றிய கூட்டமாகிலும் சரி; விவசாயம், கைத்தொழில் வியாபாரம் ஆகிய எல்லாவற்றிற்கும் கூட்டுறவு அவசியம் என்பதைப்பற்றி பேசத்தவறுவதில்லை. கூட்டுறவில்லாமல் எக்காரியமும் கை கூடுவதில்லை நமது தேசத்தில் முற்காலத்திலிருந்த கூட்டுறவு எக்காரணத்தாலோ அழிந்ததினுல் தான் தற்காலத்தில் கிராமாந்திரங்களி லுள்ளவர்களும் பட்டணங்களி லுள்ளவர்களும் கடன்காரராகி பரிதாபகரமான நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். தற்காலத்தில் பண லேவாதேவி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆங்காங்கு தோன்றி வேலைசெய்து வருகிறது. அப்பேர்ப்பட்ட சங்கங்களால் அதில் சேர்ந்த காரியஸ்தரும் நிர்வாக சம்மந்தமுள்ளவர்களும் அனுகூல மடைகிறார்களே யொழிய சாதாரண அங்கத்தினர் அவ்வளவு அனுகூலம் பெறுவதில்லை. ஆயினும் கொள்கையைப் பற்றி குறைகூறுவதிற் கில்லை. நடப்பைத்தான் சீர்திருத்த வேண்டும். எந்தவேலையையும் ஆரம்பிக்கும் போது சரிவாநடந்தேறுவது கஷ்டம். போகப் போக குறைகளை நிவர்த்தித்துக் கொண்டே போனுல் பல வருஷங்களில் அது நல்ல ஸ்திதிக்கு வந்துவிடும். நாம் இப்போது சொல்லப் போகும் கூட்டுறவு அப்பேர்ப்பட்ட பணசம்மந்தமான கூட்டுறவல்ல. பணமில்லாமல் குடியானவர்களுடைய கூட்டுறவால் குடிகளுக்கு அனுகூலத்தை உண்டாக்கக் கூடிய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம்.

தற்காலத்தில் கிருஷிகருடைய பயிர்களை பூச்சிகள் விழுந்து சேதப் படுத்துகின்றன. அவ்விஷயத்தில் கூட்டுற விருந்தால் சுலபமாய் பூச்சிகளைத் தடுக்கக்கூடும். எப்படி யென்றால் ஒரு இடத்தில் இரண்டுசம்சாரிக ளிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவர்களில் ஒருவன் தனிமையாக அக்கம் பக்கங்களில் விவசாய மில்லாத தனித்த ஓர் இடத்திலும் மற்றவன் சுற்றிலும் விவசாயமுள்ள இடத்திலும் வசிப்பதாக வைத்துக் கொள்வோம்.

முதலில் சொன்னவன் நிலத்தில் பூச்சிகள் விழுந்து அதைத் தடுப்பதற்கு அவன் யாதொரு பிரயத்தனமும் செய்யாவிட்டால்

அவன் பயிர் முற்றிலும் நாசமடைந்து போவதால் அவன் மட்டும் அதிக கஷ்டத்திற் குள்ளாகிறான். ஆனால் சுற்றிலும் மற்றவர்கள் நிலம் சூழ்ந்திருக்கும் இடத்தில் இருக்கப் பட்டவன் நிலத்தில் பூச்சிகள் விழுந்து அவன் அதைத் தடுக்காவிட்டால் தான் மட்டும் நஷ்டமடைவதோடு நிற்காமல், சுற்றிலுமுள்ள எல்லாருக்கும் நஷ்டத்தை விளைவிக்கிறான். அவர்களெல்லோரும், தங்கள் தங்கள் வயல்களில் விழுந்த பூச்சிகளைப் பிடித்துக் கொன்றாலும் இவன் ஒருவன் அவ்வேலையைச் செய்யாவிட்டால் இவன் நிலத்திலுள்ள பூச்சிகள் பல்கிப்பெருகி பூச்சிகளைப் பிடித்து கொன்றவர்கள் நிலத்திலும் புகுந்து அவர்களுக்கும் நஷ்டத்தை விளைவிக்கும். ஆகையால் எல்லோரும் ஏகோபித்து இவ்வித காரியாதிகள் நடத்தினாலொழிய எவ்வித அனுகூலமும் ஏற்படாது. இப்படிப் பட்ட விஷயத்தில் தான் கூட்டுறவு அத்தியாவசியமாக யிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பழவிருட்சங்களுக்கோ அல்லது பயிர்களுக்கோ பூச்சிகளால் ஏற்படும் நஷ்டத்தை மிகவும் ஜாக்கிரதையோடு கவனித்துத் தடுப்பதற்கு வேண்டிய வழிகளை அவனால் கூடிய மட்டும் செய்யவேண்டும். அப்படி ஒவ்வொரு மனிதனும் செய்யும் விஷயத்தில் பொது ஜனங்கள் யாவரும் நன்மையடைவார்கள். இதைப்போன்ற சுலபமான கூட்டுறவிற்கு வேறொரு உதாரணமும் கூறலாம். சாதாரணமாக ஓர் இடம் அடிக்கடி வெட்டுக் கிளிகளால் தாக்கப்படுகிறது. அவ்விடத்தில் பத்து வயல்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே வெவ்வேறு குடியானவனுக்குச் சொந்தமாயிருப்பதாகவும் ஒவ்வொன்றிலும் வெட்டுக்கிளிகளால் தாக்கப்பட்டு பயிர் நாசமடைவதாகவும் நாம் வைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது வெட்டுக்கிளிகளை ஒன்று அல்லது இரண்டு குடியானவர்கள் மட்டும் பைகளால் பிடித்துக் கொல்லும் பட்சத்தில் அவர்களுடைய முயற்சிகள், வீணாகின்றன. ஏனெனில், அக்கம்பக்கத்தில் சோம்பேறியாய் அல்லது அஜாக்கிரதையாய் ஒன்றும் செய்யாமலிருக்கிறவர்களுடைய நிலங்களிலிருந்து வெட்டுக்கிளிகள் மறுபடியும், முயற்சியெடுத்துக் கொண்ட இவர்களுடைய நிலங்களிலும் வந்து பயிரைத் தின்றுவிடும். வெட்டுக்கிளிகளைப் பையினால் பிடித்துக் கொல்வதானது ஓர் எளிதான வேலையானாலும் மிகவும் பிரயாசை கொடுக்கக் கூடியது. ஆனால் மேலே சொன்ன யிடத்தில் பத்து குடியானவர்களும் சேர்ந்து கொண்டு பத்துபேர் நிலங்களிலும் அநேகமாக எல்லா வெட்டுக்கிளிகளையும் பிடித்துக் கொல்லும் வரை வேலை

செய்வார்களானல் அதிக நன்மையடைந்து பத்துமனிதர்களுடைய பயிர்களும் காப்பாற்றப்பட்டு அவர்கள் செய்த வேலைக்கு ஏற்ற பிரதிபிரயோஜனம் பெறுவார்கள். இவ்வித சுலபமான கூட்டுறவிற்கு அநேக உதாரணங்கள் கொடுக்கலாம். தென்கன்னடம் ஜில்லாவில் வசிப்பவர்களுக்கு முக்கியமாக கடற்கரையோரமாக இருக்கும் தாலுகாக்களில் வசிக்கும் சமுசாரிகளுக்கு ஹில்பா என்று சொல்லும் வண்டானது ஒவ்வொரு வருஷமும் அவர்கள் நிலங்களுக்கு வந்து நெற்பயிரையும் நாற்றங்கால்களையும் பூராவாகவும் நாசமாக்குவது தெரியும். இந்தப் பூச்சியைத் தடுப்பது மிகவும் சுலபமான காரியந்தான். ஆனல் இதை முற்றிலும் தடுப்பதானல் அவ்விடங்களிலிருக்கும் ஒவ்வொருவரும் பூச்சி வருங் காலத்தில் ஒன்று சேர்ந்து உழைத்தால்தான் சாத்யமாகுமே யொழிய மற்றப் படி சாத்யமாகாது. இப்படி வேலைசெய்வதிலும் உண்மையாக ஒவ்வொருவரும் சுயநலம்கருதி சேர்ந்து வேலைசெய்தால் எல்லோரும் நன்மையடையலாம். ஆகையால் ஒவ்வொருவரும் மற்றவர்களைத் தன்னுடன்கூட வேலைசெய்யச் சேர்ப்பது அவர்களுடைய அக்கரையேயாகும். "ரைஸ் பக்" (Rice bug) என்று சொல்லப்படும் நாவாய்ப் பூச்சியானது பயிர்களை அழிக்கும் பூச்சிகளில் மற்றொன்று. இது, முற்றிவருகிற நெற்கதிர்களை அதிக கஷ்டப்படுத்தும். இவைகளையும் பைகளிற் பிடித்துக் கொன்று விடலாம். ஆனல் இதில் ஒருவன் தன் நிலத்தில் மாத்திரம் செய்து அருகில் உள்ளவர்கள் தங்கள் நிலங்களில் செய்யாமற் போனல் யாதொரு விதமான பயனும் இல்லாமற் போகும். இவைகளுக்கு யாதொரு பொதுப்பணமும் தேவையில்லை. வேண்டியதெல்லாம் ஒவ்வொருவரும் அக்கரையுடனும் முயற்சியுடனும் வேலை செய்வதே.

லாபத்துக்காகவோ அல்லது சொந்த உபயோகத்துக்காகவோ மாமரம் வைத்துப் பயிர் செய்கிற ஒவ்வொரு குடியானவனுக்கும் "மாங்கோ ஹாப்பர்" (Mango Hopper) அல்லது மாமரத்து பூச்சி என்ற ஒரு விதமான சிறிய பூச்சியைப்பற்றித் தெரிந்திருக்கும். இந்தச் சிறு பூச்சியானது இளங் கொழுந்துகளிலும் புஷ்பக்கொத்துகளிலும் உட்கார்ந்துகொண்டு அதன் அலகு போன்ற வாயினல் அவைகளிலிருக்கும் சாற்றை உருஞ்சி புஷ்பங்கள் முற்றிக் காயாகாமல் கருகும்படி செய்துவிடுகிறது. ஆயிரக்கணக்காகத் தோன்றி மிகுந்த நஷ்டத்தை விளைவிக்கக்கூடிய இச்சிறு பூச்சிகளை வருஷத்தின் சில

மாதங்களில் மீன் எண்ணெயினால் செய்யப்பட்ட சோப்பைத் தண்ணீரில் கலந்து இயந்திர பூர்வமாகத் தெளித்தால் தடுத்துவிடலாம். நீர் தெளிக்கும் இயந்திரங்கள் ஸ்பிரேயிங் மெஷீன்கள் (Spraying Machines) தற்காலத்தில் அதிக விலையாக யிருக்கின்றன. ஆனால் மாமரங்கள் அதிகமாகப் பயிராகிற பிரதேசத்தில் ஓர் ஐக்கியசங்கமிருக்கும் விஷயத்தில் அது இயந்திரத்தை வாங்கி வைத்து இயந்திரம் வாங்க சக்தியில்லாத சமயத்தில் ஒரு சிறிய தொகைக்குக் கொடுத்து அநேக தோப்புகளுக்கு இந்த இயந்திரத்தை உபயோகம் செய்யக்கூடும். தென்னிந்தியாவில் வியாபாரத்திற்காகப் பழவிருட்சங்கள் பயிர் செய்கிற வழக்கம் பரவுகிறபடியால் இவ்வித கூட்டுறவு நீர் தெளிப்பு மிகவும் அத்தியாவசியமாக யிருக்கும். தன்னுடைய தோப்பிலுள்ள உன்னதமான மாமரங்களுக்கு தெளிக்கும் படியான 300 ரூபாய் விலையுள்ள ஒரு பெரிய இயந்திரத்தை வாங்க சக்தியில்லாத ஒருவன் இவ்விதமாக தன் தோப்பை 10 ரூபாய் செலவு செய்து மருந்துத் தண்ணீர் தெளிக்கக்கூடும். இவ்விதமாக பழங்களைக் காப்பாற்றி அதனால் வரும் அதிக வரும்படியானது இயந்திர வாடகை போக மிகுந்த இலாபத்தையும் கொடுக்கும். அதோடுகூட கூட்டுறவு சங்கமும் இயந்திரத்தைத் தோட்டக்காரர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து சீக்கிரத்தில் இயந்திரத்தின் கிரயத்தை யெடுத்துவிடலாம். இன்னும் ஏராளமான வெட்டுக் கிளிகள் அடிக்கடி வந்து தொந்திரவு செய்யும் இராமநாதபுரம் முதலிய இடங்களில் விவசாய கூட்டுறவு சங்கங்கள், வெட்டுக்கிளிகளைப் பிடிக்கும் பைகளில் அநேகம் தயாரித்து வைத்துக்கொண்டு, அவைகளை ஓர் சிறிய தொகைக்கு வாடகைக்குக் கொடுத்து உதவக்கூடும். அப்பொழுது அவர்கள் இந்த வியாசத்தின் முற்பாகத்தில் சொன்னபடி ஒன்று சேர்ந்து பயிர்களை வெட்டுக்கிளிகள் தின்னவொட்டாமல் தடுத்து தங்கள் பயிர்களைக் காப்பாற்றலாம்

குறிப்பு.

மைசூர் ஸிமோகப் பகுதியில் உள்ள ஒரு காட்டில் ஒரு இடைப்பையன் நூறு மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு புலி அவனைத் தாக்கியது. பையன் அஞ்சி நடுங்கிக் குப்புறப்படுத்துக் கொண்டான். மாடுகளெல்லாம் ஓடி வந்து புலியை கொம்புகளால் நாலா பக்கங்களிலும் குத்தி வீழ்த்திவிட்டது: பையன் வைத்தியசாலையில்குணமடைந்து வருகிறான். மாடுகளின் வீரத்தைப் பாராட்டவேண்டும்.

CORRESONDENCE

கடிதம்

ம-ர-ஸ-ஸ்ரீ கிருஷிகன் பத்திரிகாசிரியரவர்களுக்கு அன்பார்ந்த ஐயா ராமசந்திர ஏற்றம் எவ்வாறு வேலை செய்கிறது வாங்கலாமா? தயவுசெய்து தங்களபிப் பிராயத்தை தெரிவிக்கக் கோருகிறேன். ஜானகிராம்பிள்ளை.

பதில்

ராமசந்திரஏற்றம் நன்றாய் வேலை செய்வதாகத்தான் தெரிகிறது. அதைப்பற்றி மகாத்மா காந்தி "யௌவன இந்தியா" பத்திரிகையில் பின் வரும் தலையங்கம் எழுதியிருக்கிறார்கள்.

சென்னையைச் சேர்ந்த ஸ்ரீமான் ராமச்சந்திரன் என்பவர் விவசாயப் படிப் பில்தேர்ச்சியடைந்த ஒருபட்டதாரி: சிலமாதங்களுக்குமுன் அவருடைய ராமசந்திர ஏற்றத்தை ஸபர்மதி ஆஸ்ரமத்தில் உபயோகிக்கும்படி நான் சிபார்சு செய்ய வேண்டுமென்று எழுதியிருந்தார். சாதாரணமாகப் பெரிய கிணறு களிலிருந்து ஜலம் இறைப்பதற்கு உபயோகப்படுத்தும் மாடுகளுக்கு இந்த ஏற்றத்தை உபயோகித்தால் சிரமம் குறையும் செலவும் குறையும் என்று அவர் எழுதியிருந்தார்: அவரே நேரில் வந்து ஏற்றத்தை வைத்து விட்டுப்போகும் படி பதிலெழுதினேன். அங்ஙனமே அவர் ஆஸ்ரமத்திற்கு வந்தார்: இப்போது ஒரு மாதமாக அந்தஏற்றம் உபயோகத்தில் இருக்கிறது. ஆஸ்ரமத்திலிருக்கும் விவசாய அனுபோகமுடையவர்கள் இந்த ஏற்றத்தைக் கண்டு திருப்தி யடை கிறார்கள்.

ஓர் இஞ்சினீயரைக் கொண்டு நான் சோதித்துப் பார்க்கவும் செய்தேன்: அவரும் அந்த ஏற்றத்தை சிலாக்கித்து அதைச்செய்தவரின் சாமர்த்தியத்தை வியந்தார்: அந்த ஏற்றத்திற்குடைய விசேஷங்களைப்பற்றி ஸ்ரீமான் ராமசந்தி ரன் பின் வருமாறு தெரிவிக்கிறார்.—

நமது புன்செய் நிலங்களுக்கு கிணறுகளிலிருந்து ஜலம் பாய்ச்சும் முறை எங்கும் பரவி விட்டால் இந்தியாவில் விவசாயப் பிரச்னை தீர்ந்து விடும். ஏக்கருக்கு 30 ரூபாய்க்கு மேல் சாதாரணமாக அந்த நிலங்களில் விளை வதில்லை. கிணற்று ஜலம்இறைத்து வேலைசெய்தால் 200முதல் 1000 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. பலகுடும்பங்களுக்கு வேலையும் உகப்படுகிறது. அதிகப்பணங்கொடுத்து எருதுகள் வாங்குவது தான் கஷ்டம். அவற்றின் தேகநிலையும் சீக்கிறத்தில் கெட்டு நன்றாகஉழைக்க முடியாமற் போகின்றது. இந்தக் கஷ்டத்திற்காக நான் 14வருஷங்களுக்கு முன் பரீட்சைகள் செய்து பார்த்தேன். முடிவில் இப்போது ஆஸ்ரமத்தில் வைத்திருக்கிற ஏற்றம் மாதிரி தயாரித்தேன். இந்தப் புதிய ஏற்றத்தைக் கவலையேற்ற மென்று சாதாரண மாகச் சொல்வார்கள். அதில் விசேஷம் என்னவென்றால் அதிக சிரமமில்லா மல் ஏற்றம் வேலை செய்கிறது; கேவலம் ஒரே மாட்டின் உதவியைக் கொண் டும் ஒரு டிராலியை உபயோகிப்பதன் மூலமாகவும் சிரமம் குறைந்து விடு கிறது. ஒரு மனிதன் மணிக்கு 3 மைல் வீதம் நடந்தால் மணிக்கு 12மைல்

துலிச்சக்கர வண்டியில் போகமுடிகிறது. அதுபோல் இந்த ஏற்றமானது 4 மடங்கதிகமான வேலை அதேமாதிரி சிரமமில்லாமல் செய்வதற்கு ஒத்தாசையாயிருக்கிறது. இரண்டுமாடுகள் இழுக்கும் அதே அளவு ஜலத்தை ஒரு மாடு சிரமமில்லாமல் இழுக்கும். சிரமப்பட்டு இழுக்க வேண்டிய வேலைகள் மாட்டுக்கில்லை: ஏற்றச்சாலின் உதவி அல்லது மாடுகளின் தொகையைப் பொறுத்து ராமசந்திர ஏற்றத்தின் வேலையை மதிக்க முடியாது ; ஏற்றச்சால் எவ்வளவு ஜலம் பிடிக்குமோ அதையும், மணிக்கு இத்தனை சால் ஜலம் இறைக்கப்படுகிறது என்பதையும் கண்டு அதைப் பொருத்திப் பார்த்தால் இந்த ஏற்றத்தின் லாபம் தெரியவரும்: 31 ரூ கொடுத்து ஆஸ்ரமத்தில் வாங்கிய ஒரு எருமைக் கிடாவைக் கொண்டு மணிக்கு 2000 காலன் ஜலம் இறைக்க முடிகிறது: அதாவது 60 சாலும் ஒரு சாலுக்கு 32 காலனும் இறைக்கின்றது: 34 அடி ஆழத்திலிருந்து ஜலம் இறைக்கப் படுகிறது: ஆனால் இந்த ஏற்றம் இல்லாத விடங்களில் சாதாரணமாக 300 அல்லது 400 ரூ பெறமான ஒரு ஜதை மாடுகள் 20 அடி ஆழத்திலிருந்து 1600 காலன் ஜலம்தான் இறைக்க முடிகிறது: எவ்வளவோ பணச்செலவு செய்து நான் 1 வருஷக்காலமாய் சென்னை விவசாய தொழில் இலாகா உத்தியோகஸ்தரில் 20 பேருக்கு இதை நிதர்சித்துக் காட்டினேன்: நாகபுரியில் டாக்டர் கிளௌஸ்டன் முன்பாக இதைக் காட்டியபோது அவர் மிகவும் பாராட்டினார்: சிக்கலான இயந்திரங்கள் இல்லாமலும் ராமசந்திர ஏற்றம் இறைப்பதை அவர் விலாக்கித்தார்.

மொத்தம் ஏற்றத்தின் விலை ரூபா 275 தான்: 50 அடி ஆழத்திலிருந்து ஜலம் இறைக்கலாம்: ஆனால் எல்லாரும் வாங்க ஆரம்பித்தால் விலையை இன்னும் குறைக்க முடியுமென்று ராமசந்திரன் சொல்லுகிறார்: 30 அடி ஆழத்திலிருந்து இறைக்கும் இயந்திரம் 230 ரூபாய்க்கு அகப்படும்: கட்டுப்பாடாக எல்லாரும் உபயோகித்தால் 150 ரூபாய்க்கு விற்கமுடியும்: ஏற்றம் செய்தவருக்குள்ள பிரத்தியேக உரிமைகளை அவர் விட்டுக் கொடுத்தால் இன்னும் செலவு குறையுமென்று நான் சொல்லியிருக்கிறேன் எருமைக்கிடாவின் விலை 30 ரூபா என்று வைத்துக் கொண்டால் மொத்தம் 105 ரூபாய்க்கு இப்போதுள்ள விலைப்படி ஏற்றம் வைத்து விடலாம்: எருதுகள் வாங்கினால் 300-400 ஆகும்; செய்சேர்த்திக்கும் 50-60 ஆகும்: எனவே இந்த ஏற்றத்தினால் எவ்வளவோ மிச்சப்படுகிறது: கேவலம் ஒரு எருமைக் கிடாவைக் கொண்டு, இதற்குச்சிரமம் வைக்காமல் இந்தஏற்றத்தை உபயோகிக்க முடிகின்றது: கவர்ண்மென்டார் இத்தனை காலமாக இதைப்பற்றி கவனியாதது ஆச்சர்யம். அதிகாரிகளின் அசிரத்தையைப்பற்றி ஸ்ரீமான் ராமச்சந்திரன் பல பலவாறான புகார்கள் கூறியிருக்கிறார்: ஏற்றம் வேலை செய்யும் அழகு ஆஸ்ரமத்துக்கு வந்து பார்த்தால் தெரியும்: இந்திய விவசாய அபிவிருத்தியில் சிரத்தையுள்ள எல்லாரும் இந்த ஏற்றத்தைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டும்.

REVIEW OF JOURNALS.

பத்திரிகை விமர்சனம்.

ஆநந்த குணபோதினி

இது ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை. பத்திராசிரியர் ஸ்ரீமான். S. G இராமானுஜலு நாயுடு. அசுப்படும் இடம்:— ம-ா-ா-ஸ்ரீ தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு சென்னை. வருடசந்தா ரூ ஒன்று தான்.

ஆநந்தகுண போதினி என்னும் ஓர் மாதாந்தரப் பத்திரிகையின் ஒன்று முதல் 9 பிரதி வரை வந்தனத்துடன் வரப்பெற்றோம், இப்பத்திரிகையானது ஓராண்டிற்குள்பட்ட வயதுடையதாயினும். இதன் ஆசிரியரான ஸ்ரீமான் S. G. இராமானுஜலு நாயுடவர்கள் சென்ற 25 வருஷங்களாக பிரஜாநுகூலன் என்ற மாதாந்தரப் பத்திரிகையை நடத்தி அதிக அனுபோக முள்ளவர்களாதலாலும், தற்காலத்திலிருக்கும் ஆசிரியர்களுக்குள் உலக அநுபவங்கள் உள்ளதை உள்ளபடி கவனித்து எழுதுவதில் நிகரற்றவராதலாலும், இப்பத்திரிகையில் எழுதப்படும் விஷயங்கள் எவர் மனதையும் வசீகரிக்கச் செய்யுமென்பதில் கிஞ்சிற்றேனும் ஐயமில்லை. இதில் குழந்தைகள் முதல் முதியோர் வரையில்கேட்டானந்தப்படக் கூடிய விஷயங்களும், கதைகள், விகடத் துணுக்குகள், மனோரம்யமான குறிப்புகள் முதலியவைகளும் மாதா மாதம் வெளிவருகின்றன. இப்பத்திரிகைக்கு நீண்ட ஆயுளையும் அளவற்ற சந்தா நேயர்களையும் கொடுத்தருள வேண்டுமென்று ஸ்ரீமந்நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜன மித்திரன். வாராந்திரத்தமிழ் பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 6. ஆசிரியர் ஸ்ரீமான். சுப்ரமணிய ஐயர். அசுப்படும் இடம் புதுக்கோட்டை.

இப் பத்திரிகையானது சமஸ்தானத்தின் ஜனங்களுக்கு ராஜீய ஞானத்தை ஊட்டி, கிராமவாழ்க்கையை புனருத் தாரணம் செய்யக் கூடிய வழிகளை எடுத்துக்காட்டி, கைத்தொழில்களை விருத்திசெய்யும் மார்க்கங்களைப் புகட்டி பல விதங்களில் வாசகர்களுக்கு தன் பேருக்கேற்ப உண்மை மித்திரனு யிருக்கு மென்று நம்புகிறோம். வகுப்பு துவேஷமே கொள்கை யாகவும் தனி நபர்களையாவது சமூகத்தாரை யாவது தூஷிப்பதே அதிக கௌரவமெனவும் நினைத்து அவ்வாறு எழுதி வரும் பத்திரிகைகள் இப்போதே மிகுந்திருப்பதால் இப் பத்திராசியர் விருப்பு வெறுப்பின்றி பொறுப்புடன் எழுதி வருவாரென்று நம்புகிறோம்,

குறைந்தவிலை நிறைந்தசுவை

ஜகன் மோகினி.

இது ஓர் தமிழ் நாவல்களடங்கிய மாதாந்தரச் சஞ்சிகை

இதன் நான்காவது ஆண்டில் ஸ்ரீமதி வை. மு கோதை நாயகி அம்மாளால் எழுதப்பட்ட பத்மசுந்தரன் என்னும் விநோதமான துப்பறியும் நாவல் வெளியாகின்றது. இதன் வருடசந்தா உள்நாடு வெளிநாடு இரண்டிற்கும் ரூபா 1-8-0 மாதிரிப்பிரதி அணா 3. இதன் சாந்தா நேயர்களுக்கு சென்றஆண்டில் வெளியான வைதேகி இரண்டு பாகங்களும் ரூபா 2-க்குக் கொடுக்கப்படும். 5 சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நண்பர்களுக்கு 1 வருஷ சஞ்சிகையும் 12 பேர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு வைதேகி 2-பாகங்களும் 1- வருஷ சஞ்சிகையும் இனமாகக் கொடுக்கப்படும்.

"ஜகன் மோகினி" ஆபீஸ்,
26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, Madras

ஞானோதயம்

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய உயர் நலவிஷயங்களைப் பரவச் செய்யும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ 1.

பத்திராதிபர்:—ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு.
ஏனங்குடி, தஞ்சாவூர் ஜில்லா.

கம்மபாலன்.

தமிழ் மாதப் பதிப்பு.

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராம வாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும் விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வெண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

P. வேங்கிடசாமி நாயுடு.
பத்திராதிபர் கம்மபாலன்.
திருத்தாங்கல்

THE EAST & WEST TRADE DEVELOPER

The only Commercial Monthly of its kind in India specially devoted to the promotion & consolidation of the international trade connections. It will keep you in intimate touch with the latest news, developments & progress of the trade in India and abroad. It will help yon to secure agents or agencies in any part of the world. Subscripton Rs 10 or £ 1 a year.

THE MERCANTILE DIRECTORY OF GERMANY

Gives an up-to date list of prominent Manufacturers Merchants, Exporters Importers etc, in Germany, dealing in each class of goods classified under alphabetical trade headings.

Rs. 10 or Sh. 15.

THE MERCANTILE DIRECTORY OF JAPAN.

This publication contains an up-to-date list of Merchants, Manufacturers, Importers, Exporters etc,, in Japan, dealing in each class of goods classified under alphabetical trade headings, as also useful facts and figures concerning Japanese trade industry. Rs 10 or Sh. 15.

--PUBLISHERS--

The East and West Trade Developer

RAJKOT, India

Printed at the "Raju Press" and Published by
Rao Bahadur J. Chelvaranga Raju at "Jagannadha Baugh"
Saidapet.